நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

தேவி கருமாரி
நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்
22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.
66. Kasthuriar Road, Jaffna
66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆடி 19 ஹிஜ்ரி 1427 றஜபு 09 (04.08.2006) வெள்ளிக்கிழமை இதழ் 306

## திருகோணமலை - மூதூரில் மூன்றாவது நாளாகவும்

# கடும் சமர் தொடர்கிறது

## முற்றுகையை முறியடிப்பதற்கு படையினர் பெரும் பிரயத்தனம்

திருகோணமலை —

திருமலை - மூதூரின் பெரும் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ள விடுதலைப் புலிகள் - நேற்று மூன்றாவது நாளாகவும் தாக்குதல்களை மேற்கொண்டு பல பிரதேசங்களை தமது பிடிக்குள் கொண்டு வந்துள்ளதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மூதூர் நகரப்பகுதியில் நேற்றும் தொடர்ந்து மோதல்கள் . (10 ஆம் பக்கம் பார்க்க)

## 40 படையினரின் சடலங்களை ஒப்படைக்க புலிகள் முயற்சி!



### இராணுவப் பேச்சாளர் இளந்திரையன்

கிளிநொச்சி —

மூதூரில் விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்டுவரும் தாக்குதல் நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட 40 படையினரின் சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழு மூலம் அரசிடம் ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

மூதூர் நிலைமைகள் தொடர்பாக கருத்து வெளியிட்டிருக்கும் அவர்-

மூதூரில் பெரும்பாலான முகாம்களில் எங்கள் போராளிகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்தவர்களை மீட்க 1 மணிநேர மோதல் தவிர்ப்பு

திருகோணமலை —

மூதூரில் நடைபெற்ற மோதல்கள் மற்றும் படையினரின் ஆட்லறி தாக்குதலில் காயமுற்ற பொதுமக்களை வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்வதற்காக நேற்றுமாலை ஒரு மணிநேர போர்தவிர்ப்பு கடைபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளும், அரச படைகளும் ஒரு மணிநேரம் தாக்குதல்களை நிறுத்தியிருந்ததாகக் கூறப்படுகிறது.

நேற்றுமாலை 5.15 மணியளவில் கடற்படையினரின் வோட்டஜெட் படகுகள் மூலம் மூதூர் பொதுமக்கள் இறங்கு துறையில் இருந்தே காயமுற்ற பொது மக்கள் 79 பேர் திருமலைத்துறை முகத்துக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

இவர்களில் 14 பொலிஸாரும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரைத் தரையிறக்கும் முயற்சி புலிகளால் முறியடிப்பு

### கடற்படைப் படகு மூழ்கடிப்பு

திருகோணமலை —

திருகோணமலை - மூதூர் இறங்கு துறையில் கடற்படைப் படகுகள், தரையிறங்கு கலம் ஆகியவற்றின் மூலம் படையினரைத் தரையிறக்க மேற்கொண்ட முயற்சியை புலிகள் முறியடித்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 7மணியவில் திருகோணமலை கடற்படைத் தளத்திலிருந்து உதவித்துருப்புக்களை ஏற்றிய தரையிறங்கு கலம் மற்றும் பீரங்கிப் (10 ஆம் பக்கம் பார்க்க)



குவிக்கப்படும் மேலதிக படையினர்

## படையினரின் ஆட்லறிக்கு 22 முஸ்லிம் மக்கள் பலி!

திருகோணமலை —

திருகோணமலையில் மூதூர் மற்றும் தோப்பூரில் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தங்கியிருந்த இரு பாடசாலைகள் மீது படையினர் மேற்கொண்ட ஆட்லறித் தாக்குதலில் 22 அப்பாவி முஸ்லிம் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 60 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் மூதூர் நகரிலுள்ள அரபிக் கல்லூரியின் மீது முதலாவது தாக்குதல் நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் தங்கியிருந்த இந்தப் பாடசாலையில் ஆட்லறி ஷெல் ஒன்று விழுந்து வெடித்து பெரும் சேதம் விளைவித்தது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீசியது படைத் தரப்பே!

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு —

புலிகளின் இலக்குகளை தாக்குவதாகக் கூறிக் கொண்டு அரச படையினர் மேற்கொண்ட ஆட்லறி ஷெல் தாக்குதலிலேயே அப்பாவி முஸ்லிம் மக்கள் பலியாகினர் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மூதூரில் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக பேட்டி அளித்த (10 ஆம் பக்கம் பார்க்க)



## தாக்குதலை நிறுத்த புலிகள் 3 நிபந்தனைகள் விதிக்கலாம்

### கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு —

போர்நிறுத்த உடன்பாட்டுக்கு அமைய உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து படையினரை அகற்றுதல், துணை ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைதல், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் போராளிகளை அரசியல் நடவடிக்கைகளுக்கு அனுமதித்தல் ஆகிய மூன்று விடயங்களையும் நடைமுறைப்படுத்தினால் மட்டுமே -

புலிகள் மூதூரில் தற்போது மேற்கொண்டுவரும் படை நடவடிக்கைளை இடைநிறுத்துவது குறித்த முடிவுகளை எடுக்கக்கூடும் என கொழும்பு (10 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை துறைமுக பாதுகாப்பு:

## புலிகளின் உத்தரவாதம் பெற இலங்கை அரசாங்கம் முயற்சி!

கொழும்பு —

திருகோணமலை துறைமுகத்தின் பாதுகாப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் இறங்கியிருப்பதாக சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளால் திருகோணமலை துறைமுகத்தின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் திருகோணமலை துறைமுகத்தின் பாதுகாப்புத் தொடர்பாக புலிகளிடம் இருந்து நேரவே ஊடாக உத்தரவாதம் பெற அரசு முயற்சி எடுத்துள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
021 222 3891 / 6297, 077 234 9999
jaffna@expoavi.com
011 2360290 / 291, 011 2372952 / 953
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமானசேவை...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



மூதூரில் நேற்று அரச படையினரின் ஆட்லறித் தாக்குதலில் காயமடைந்து திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறார்கள சிலரைப் படங்களில் காணலாம். (04)

# போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து அரசாங்கம் விலகவேண்டும்!

## விமல் வீரவன்ச கோரிக்கை



கொழும்பு—

போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து அரசாங்கம் உடனடியாக விலகிக் கொள்ளவேண்டும் என்றும் -

நோர்வேயை நாட்டைவிட்டு வெளியேற்றவேண்டும் என்றும் ஜே.வி.பி.யின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செய்தியாளர் மாநாடு கொழும்பில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

எரிக் சொல்ஹெய்ம் தனது அறிக்கையில் அரசாங்கத்துக்கு உத்தரவு பிறப்பிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

அரசாங்கப் படையினரும் - தமிழீழ விடுதலைப் புலிகளும் மீண்டும் தமது பழைய நிலைகளுக்குத் திரும்ப வேண்டும் எனக் கூறியிருக்கிறார்.

இலங்கை இறைமையுள்ள நாடு என்றவகையில் சொல்ஹெய்முக்கு - அரசாங்கத்துக்கு உத்தரவு இடும் அதிகாரம் இல்லை.

எரிக் சொல்ஹெய்ம் தனது அறிக்கையில் மாவிலாறு அணை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இது எரிக் சொல்ஹெய்ம் இலங்கையின் இறைமையைப் பாதித்த இன்னொரு சம்பவமாகும். இது விடுதலைப் புலிகளுக்குச் சார்பாகத் தெரிவித்த கருத்தாகும்.

இந்த நிலையில் போர்நிறுத்த உடன்படிக்கையில் இருந்து அரசாங்கம் விலகவேண்டும்.

இந்தியாவில் இருந்து பிரித்தானியாவின் செய்தி நிறுவனமொன்றின் ஊடகவியலாளர்கள் லெபனானுக்குச் செல்வதை நிறுத்தி நேற்றுமுன்தினம் இலங்கை வந்துள்ளனர். லெபனானில் நடப்பதைக் காட்டிலும் இலங்கையில் நடைபெறுகின்ற யுத்தம் அவர்களுக்குப் பெரிதாகத் தெரிந்துள்ளது.

விடுதலைப் புலிகள்மீது தாக்குதல் நடத்தப்படுவதை அந்த நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. அவர்கள் இங்கு வந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசங்களுக்கு நீர் விநியோகம் செய்யப்படவில்லை என்பதை சர்வதேசத்துக்குக் காட்டுவதே நோக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்றும் குறிப்பிட்டார்.

# கண்காணிப்புக் குழுவின் திருமலை அலுவலகம் செயலிழப்பு

திருகோணமலை—

திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்ட அலுவலகம் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண கடற்படைத் தளம் மீது கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலையடுத்தே இந்த அலுவலகம் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அலுவலகத்திலிருந்த கண்காணிப்பாளர் அனைவரும் நிலாவெளியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ளனர்.

மூதூரிலிருந்த கண்காணிப்புக் குழுவில் உப அலுவலகம் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் மூடப்பட்ட நிலையில் தற்போது திருகோணமலை நகரிலுள்ள மாவட்ட கண்காணிப்புக் குழுவின் அலுவலகமும் மூடப்பட்டுள்ளது.

திருகோண மலையில் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட்டாலே மூடப்பட்ட அலுவல கம் திறக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# மன்னாரில் கிளைமோர் தாக்குதல் பதிலுக்கு படையினர் ஷெல் வீச்சு!

மன்னார்—

மன்னார் - பரப்பங்கண்டலில் நேற்றுக்காலை 6.45 மணியளவில் படையினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரண்டு படையினர் காயமடைந்தனர்.

இந்தக் கிளைமோர்த் தாக்குதலையடுத்து பரஸ்பரம் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து தள்ளாடி மற்றும் உயிலங்குளம் இராணுவ முகாம்களில் இருந்து விடுதலைப் புலிகளின் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதையடுத்து, பரப்பங்கண்டல் கிராமத்தைச் சேர்ந்த 200 க்கும் அதிகமான குடும்பங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள- காத்தாங்குளம், ஆட்காட்டிவெளி ஆகிய கிராமங்களிலுள்ள ஆலயங்களில் தஞ்சமடைந்துள்ளன.

இதேவேளை - செட்டியார் கட்டையடம்பன் பகுதியில் ஷெல் விழுந்து வெடித்ததில் கால்நடைகள் பல உயிரிழந்தன.

உயிலங்குளம் சோதனைச்சாவடியும் படையினரால் சில மணிநேரம் மூடப்பட்டு - பின்னர் திறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை , மன்னார்-மூர்வீதியில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மன்னார் அலுவலகப் பிரதிநிதியின் வாகனச் சாரதியான- இக்னேசியஸ் என்பவரின் வீட்டின் மீது நேற்று நள்ளிரவு 12.30 மணியளவில் டைனமற் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் அவரது 16 வயது மகன் டிலக்ஷன் காயமடைந்து மன்னார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வீட்டின் முன்பகுதியும் சேதமடைந்துள்ளது. (மோ)

# மாவிலாற்றின் மேற்குப்பகுதி படையினரின் கட்டுப்பாட்டில்!

## இராணுவ அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு—

திருகோணமலை-மாவிலாற்றின் மேற்குப்புற அணைக் கதவைப் படையினர் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்திருப்பதாக- தேசிய பாதுகாப்பு ஊடகத்தகவல் நிலையத்தின் சிரேஷ்ட கட்டளை அதிகாரியான மேஜர் உபாலி ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார்.

மாவிலாற்று அணையைத் திறந்து விடுவதற்கான படை நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறுகிறது.

மாவிலாறு பகுதியை மீட்பதில் இராணுவம் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. மேற்குப்பகுதியூடாக இராணுவம் அந்த இடத்துக்கு மிகவும் அண்மித்துள்ளது. கிழக்குப் புறமாக தாமதமாகவே அந்தப்பகுதியை அடைய வேண்டியுள்ளது.

புலி களின் தாக்குதலில் இருந்து பாதுகாப்புப் பெறவேண்டிய தேவையுள்ளது.

இந்தப்பிரதேசத்தை அடைய இன் னும் 400 மீற்றர் தூரமே இருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊர்காவல் படைப்பிரிவு தனித்திணைக்களமாகியது

கொழும்பு—

ஊர்காவல்படையை ஒரு திணைக்களத்தின் கீழ் ஒருங்கிணைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ- அமைச்சரவைக்கு இது தொடர்பான பத்திரத்தை சமர்ப்பித்தார்.

கடந்த ஜனவரி மாதம் 20 ஆயிரமாக இருந்த ஊர்காவற்படையினரின் ஆளணிப் பலத்தை 35 ஆயிரமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஊர்காவற்படையை ஒரு சிவில் பாதுகாப்புத் திணைக்களமாக்க அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# பொன்சேகா மீதான தாக்குதல் சந்தேகநபர்கள் 6 பேருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்!

கொழும்பு—

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீதான தாக்குதல் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஆறு பேரையும் தடுப்புக்காவல் உத்தரவின்கீழ் தொடர்ந்தும் விசாரணை செய்வதற்கு கொழும்பு கோட்டை நீதிவான் நாமல் பண்டார பலல்லே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுமதியளித்துள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர்- தாக்குதலாளியை கொழும்புக்கு அழைத்துவந்து - அவரை இராணுவத் தலைமையகத்திற்கு கொண்டு சென்ற தமிழ் லொறிச் சாரதி, அவரது மனைவியான சிங்களப் பெண், தாக்குதலாளிக்கு போலி அடையாள அட்டை தயாரித்து வழங்கிய கிராம சேவகர் உட்பட ஆறு பேரை கைது செய்தனர்.


கடும் காவல்களுக்கு மத்தியில் சந் தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய நீதிவான் சந்தேக நபர்களை தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்க அனுமதியளித்தார்.



திருமலை - மூதூர் பகுதியில் இடம்பெற்றுவரும் மோதல்களில் காயமுற்ற படையினர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதைப் படங்களில் காணலாம்.

# படை நடவடிக்கைகளை உடன்நிறுத்த வேண்டும்

## சொல்ஹெய்ம் கோரிக்கை



ஒஸ்லோ

இரண்டு தரப்பும் தமது இராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டுமென நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை நிலவரம் தொடர்பாக நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியிலிருந்து நீர் விநியோகம் தடுக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த சில நாட்களாக போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள இருதரப்பினரும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


தற்போதைய நிலைமையானது இனப்பிரச்சினை விடயத்தில் இராணுவ மோதலை உருவாக்கக்கூடும். இந்த நடவடிக்கைகள் 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாகும்.

இருதரப்பினரும் தற்போதைய போர் நடவடிக்கைகளைக் கைவிட்டு பேச்சுக்களுக்குத் திரும்பவேண்டும். பொதுமக்களைப் பாதிக்காத வகையில் விடுதலைப் புலிகள் நீர் விநியோகத்தைக் கண்டிப்பாகத் திறந்துவிட வேண்டும். அரச படைகளும் தங்களது இராணுவ நடவடிக்கைகளைத் திரும்ப பெறவேண்டும்.

இந்த நிலையில் இன்று வரும் நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்சர் பௌயர் இரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

கண்காணிப்புக் குழுவினரது எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக பேச்சு நடத்த நான் - ஹன்சர் பௌயரை அனுப்பியுள்ளேன். மிகவும் சிக்கலான கட்டத்தில் டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, சுவீடன் மற்றும் நோர்வே நாட்டினர் பாரிய பங்காற்றியுள்ளனர். தற்போது மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இருதரப்பினரும் போர் நிறுத்தத்தை மதித்துச் செயற்படும் வகையிலானதாக இருக்கும் என்றும் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளதாக நோர்வே வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூதூரின் நிலைமைகள் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் ஆலோசனை



கொழும்பு

மூதூரில் ஏற்பட்டிருக்கும் தற்போதைய நிலைமைகள் குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்றுமுன்தினம் ஆலோசனை நடத்தியது.

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் இராணுவ நடவடிக்கையைக் கைவிட்டு பேச்சுக்குத் திரும்ப வேண்டு மென்று வலியுறுத்த முஸ்லிம் காங்கிரஸ் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மூதூர் மோதலைத் தொடர்ந்து நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கரை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் சந்தித்துப் பேசியுள்ளார். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரையும் அவர் விரைவில் சந்திக்கவுள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைத் தொடர்பு கொண்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் - பொதுமக்களுக்கான உதவிகளைச் செய்யுமாறும் கோரியுள்ளார். மூதூர் நிலைமைகள் குறித்து ஹக்கீம் விரைவில் நேரில் சென்று ஆய்வு நடத்தவுள்ளார்.

## புதிய வைத்தியர்களை உடன் சேவைக்கு அழைப்பு

கொழும்பு

நாட்டின் தற்போதைய தேவை கருதி புதிய வைத்தியர்களை துரித மாகச் சேவைக்கு வருமாறு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள் ளது.

இதன் அடிப்படையில் புதிதாகப் பணி நியமனங்கள் பெற்ற அனைத்து வைத்தியர்களும் இன்று கடமைக்குத் திரும்ப வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் அத்துல காந்தலியனகே தெரிவித்தார்.

850 புதிய வைத்தியர்கள் நியமனம் செய்யப்பட்டதுடன் அவர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதியே கடமைகளை பொறுப்பேற்க இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## திருமலை மோதல்களை கண்காணிக்கவில்லை!

### போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு

திருகோணமலை

மூதூர் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்குமிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களை கண்காணிப்பதற்கு கண்காணிப்பாளர்களை அனுப்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொபினூர் எமர்சன் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்குமிடையில் மோதல் உக்கிரமடைந்திருப்பதால் - அந்தப் பகுதிக்கு கண்காணிப்பாளர்கள் செல்வதற்கான பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருப்பதால் கண்காணிப்பாளர்களை அனுப்பவில்லை.

திருகோணமலையில் பல்வேறு இடங்களில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றதாகவும், அந்தப் பகுதிகளில் தொடர்ந்தும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேவாலயத்தில் ஷெல் வீழ்ந்து எட்டு வயதுச் சிறுவன் பலி!

மூதூர்

மூதூரில் அகதிகள் தங்கியிருந்த தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட ஆட்லறித்தாக்குதலில் 8 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். மேலும் 3 பெண்கள் படுகாயமடைந்தனர்.

மூதூரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதலைத் தொடர்ந்து 600 இக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து மூதூர் சென். அன்ரனிஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்தனர். இதன்போது ஆலயத்தின் மீது ஆட்லறி ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்தது.

இந்த ஆட்லறி ஷெல் தாக்குதலில் அரவிந்தன் என்ற 8 வயது சிறுவன் உயிரிழந்ததுடன், 3 பெண்கள் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த மூவரையும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாதநிலை ஏற்பட்டதாகவும், தேவாலயத்தில் வைத்தே சிகிச்சையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மூதூர் பிரதேசத்திலிருந்து ஆறாயிரம்பேர் இடம்பெயர்வு

மூதூர்

மூதூர் பிரதேசத்திலிருந்து ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக அச்சமடைந்த மக்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களிலும், பாட சாலைகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

இடம்பெயர்ந்த மக்களின் விபரங்களைத் திரட்டிவரும் சர்வதேச செஞ்சிலு வைச் சங்கம் - அவர்களுக்கான அடிப்படை வசதிகளையும் மேற்கொண்டுள்ளனர்.

பெருமவான பொதுமக்கள் மோதல் இடம்பெறும் பகுதிக்குள் சிக்கியிருப்ப தாகவும் - அவர்கள் அங்கிருந்து வெளியேற முடியாமல் திணறுவதாகவும் தெரியவருகிறது.

## மாவிலாறு விவகாரம் குறித்து பாலா - சொல்ஹெய்ம் பேச்சு!



லண்டன்

மாவிலாறு அணைக்கட்டுப் பிரச்சினை குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

லண்டனில் கடந்த வியாழக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் போது கண்காணிப்புக் குழுவினருக்கு - விடுதலைப் புலிகள் விதித்துள்ள காலக்கெடு குறித்தும் விவாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி மீதான பொருளாதாரத் தடைகளை செயற்படுத்தியும், விமானக் குண்டு வீச்சுக்களை நடத்தியும் வரும் அரசாங்கமே தற்போதைய நிலைமை களுக்குக் காரணம் என்று எரிக்சொல் ஹெய்மிடம் அன்ரன் பாலசிங்கம் எடுத்துக் கூறினார்.

நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் இன்று இலங்கைக்கு வரவுள்ளநிலையில் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்தாகக் கருதப்படுகிறது.

## புலிகளுக்கு எதிராக தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

### பிரதமர் தெரிவிப்பு



கொழும்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

மாவிலாறு அணையைத் திறப்பதற்காகப் படையினர் மேற்கொண்டுள்ள தாக்குதல் தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மக்களின் வாழ்க்கைக்கு ஏற்படும் தடையை விலக்குவதற்காக இந்தத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அத்துடன் கொழும்பு உட்பட முக்கிய நகரங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மாவிலாறு அணை மூடப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது எனத் தெரிவித்தார்.

## மூதூர் வைத்தியசாலையும் ஷெல்தாக்குதலில் சேதம்!

மூதூர்

இராணுவ முகாமிலிருந்து கண்மூடித்தனமாக வீசப்பட்ட ஷெல்கள் மூதூர் வைத்தியசாலையிலும் விழுந்து வெடித்ததால் நோயாளிகள் பலர் காயமடைந்ததுடன், வைத்தியசாலைக் கட்டடமும் பலத்தசேதமடைந்தது.

இதனால், தற்போது வைத்திய சாலை மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் உதவியாளர்கள் அனைவரும் வைத்தியசாலை வளாகத்திலிருந்து வெளியேறிவிட்டதாகத் தெரிகிறது.

திருகோணமலை கடற்படைத் தளத்திலிருந்து கடற்படையினர் தங்களது ஷெல் தாக்குதல்களை மக்கள் குடியிருப்புக்களைநோக்கி மீண்டும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூதூர் வைத்தியசாலையில் பணியாற்றும் ஊழியர் ஒருவரும் ஷெல் வீச்சில் பலியாகியுள்ளார்.

## மற்றொரு ஐ.தே.க. எம்.பி. பிரதி அமைச்சரானார்

கொழும்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லயனல் பிறேமசிறி - ஜனாதிபதி மகிந்த ராஜக்ஷ முன்னிலையில் நேற்று முன்தினம் பிரதி அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்தார்.

சமூகசேவை மற்றும் சமூக நலன் புரி பிரதியமைச்சராகப் பதிவிப் பிரமாணம் செய்துகொண்ட வைபவத்தில் அமைச்சர்கள் பலரும் பங்குபற்றினர்.

பிரதி அமைச்சராக பதவி ஏற்றபின் கருத்துத் தெரிவித்த லயனல் பிறேமசிறி - அரசின் சகல செயற்பாடுகளையும், அமைச்சரவைக் கூட்டங்களுக்கும் ஒத்துதழைப்பு வழங்குவதே தமது நோக்கம். இனப்பிரச்சினையைத் தீர்த்தால் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமென நான் கருதுகிறேன்.

ஜனாதிபதி மிகவும் அர்பணிப்புடன், அமைதியான முறையில் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஆர்வமாக உள்ளார் என நான் நம்புகிறேன்.

இதேவேளை, நாட்டின் பிரஜைகளையும், சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக ஜனாதிபதி பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பதில் இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் ஜெயவர்த்தன!



கொழும்பு

இராணுவத் தலைமையக நடவடிக்கை இயக்குநர் பிரிகேடியர் அத்துல ஜெயவர்த்தன பதில் இராணுவப் பேச்சாளராகவும், இராணுவ ஊடகப் பிரிவு பணிப்பாளராகவும்நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க நாடு திரும்பும் வரை பிரிகேடியர் அத்துல ஜெயவர்த்தன தமது கடமைக்கு மேலதிகமாக இராணுவப் பேச்சாளர் பொறுப்பையும் வகிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைப் பொலிஸாருக்கு எவ்வித ஆயுதப் பயிற்சியும் அளிக்கவில்லை

## கோவை பயிற்சிக் கல்லூரி முதல்வர் தெரிவிப்பு

கோவை —

கோவை சி.ஆர்.பி.எப். முகாமில் இலங்கை பொலிஸாருக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு ஆயுத பயிற்சியோ, துப்பாக்கி சுடுதல் போன்ற பயிற்சிகளோ அளிக்கப்படவில்லை என இந்தப் பயிற்சி கல்லூரியின் முதல்வர் ஜோர்ஜ் பிரான்சிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

அண்மையில் இலங்கையிலிருந்து 44 பொலிஸார் பயிற்சி பெற கோவை குருடம் பாளையம் சி.ஆர்.பி.எப். முகாமுக்கு வந்தனர். இவர்களில் ஐந்து பேர் இலங்கைப் பொலிஸ் துறையில் உயர் பதவி வகிப்பவர்கள். பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் திடீரென கலவரம் ஏற்பட்டால் அதை தடுப்பது எப்படி? அதில் குற்றவாளிகளை எப்படி கண்டறிவது? போன்ற அடிப்படை பயிற்சிகள் இவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக - தடியடி, தண்ணீர் பீரங்கியைப் பயன்படுத்தி கூட்டத்தைக் கலைப்பது போன்ற அடிப்படை பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்திய அரசின் உரிய அனுமதியின் பேரில், இலங்கைப் பொலிஸார் 200 பேருக்கு பாதுகாப்புத் தொடர்பான சில அடிப்படை பயிற்சிகள் மட்டும் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அங்கு தற்போது போர் நடப்பதால் இங்கு வந்து பயிற்சி மேற்கொள்ள இலங்கை அரசு, இந்திய அரசை அணுகியதன் அடிப்படையில் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இவர்களைத் தவிர இன்னும் 156 பொலிஸார் பயிற்சிக்காக வரவுள்ளனர். இவர்களுக்கு ஆயுதப் பயிற்சியோ அல்லது துப்பாக்கி சுடுதல் பயிற்சியோ வேறு நவீன பயிற்சிகளோ அளிக்கப்படுவதில்லை. கூட்டத்தைக் கலைத்தல் தொடர்பான பயிற்சி மட்டுமே அளிக்கப்படுகிறது.

சி.ஆர்.பி.எப் முகாமில் இலங்கை இராணுவத்துக்கு அதிநவீன பயிற்சி அளிக்கப்படுவதாக சிலர் சந்தேகம் எழுப்பியுள்ளனர். அத்தகைய பயிற்சி எதுவும் அளிக்கப்படவில்லை. பொலிஸாருக்கு மட்டும் சாதாரண பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

சந்தேகப்படுபவர்கள் என்னைத் தொடர்பு கொண்டால், உரிய விளக்கம் அளிப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வற்வரி மோசடி நபர்களுக்கு விளக்கமறியல் மேலும் நீடிப்பு

கொழும்பு —

வற்வரிமோசடி வழக்கில் கைதான 6 சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிமன்றில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. சந்தேக நபர்கள் 4 பேர் பிணைகோரி தாக்கல் செய்த மனுவுக்கு அரச தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.


சந்தேக நபர்களின் பிணை மனு மீதான தீர்ப்பை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக நீதிபதி நமல் பண்டார பலலை தெரிவித்தார்.

கணக்கு ஆய்வாளரின் அறிக்கையின் படி உள்நாட்டு வருவாய் திணைக்களத்தில் நடந்த வற்வரி மோசடி குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் 19 போலித் தேசிய அடையாள அட்டைகளையும் பொலிஸார் கைப்பற்றினர். இந்தப் போலி அடையாள அட்டைகள் மூலமாக வற்வரி மூலம் பெருந்தொகையான பணம் மோசடி செய்யப்பட்டது தெரியவந்ததையடுத்து 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

# தமிழகத்தில் இலங்கை படையினரின் பயிற்சிக்கு அனுமதிக்கப்படவில்லை!

## சட்டசபையில் கருணாநிதி



சென்னை —


தமிழகத்தின் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சியளிப்பதற்கு அனுமதி வழங்கவில்லை எனத் தமிழக முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 54 படையினருக்கு- கோயம்புத்தூரிலுள்ள இராணுவப் பயிற்சிக்கல்லூரியில் பயிற்சி வழங்குவதற்கு இந்திய மத்திய அரசு தீர்மானித்தது.

இலங்கையில் தமிழ்மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது, தமிழகத்தில் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதைத் தமிழக அரசு அனுமதிக்கக்கூடாதென ம.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் கண்ணப்பன் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

இந்திய அரசின் இத்தகைய நடவடிக்கையைத் தவிர்ப்பதற்குத் தமிழகமுதல்வர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் கேட்டுக் கொண்டதற்குப் பதிலளிக்கும் போதே தமிழகத்தில் இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சியளிக்க அனுமதிக்க முடியாதென கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

# இனப்பிரச்சினைக்கான நிபுணர் குழு அர்த்தமற்றது என்கிறார் ஜி.எல்.பீரிஸ்



கொழும்பு —

இலங்கை இனப்பிரச்சனைக்கு தீர்வு காண எதுவித அரசியல் வழிகாட்டுதலும் இல்லாமல் ஒரு நிபுணர் குழுவை நியமித்துள்ளமையானது - அர்த்தமற்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான ஜி.எல். பீரிஸ் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், அரசியல் ரீதியான ஒரு பிரச்சினைக்கு அதிகாரிகள் நிலையிலானோரால் எதுவித தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கமுடியாது.

இனப்பிரச்சனைக்கான தீர்வு என்பதில் அதிகாரப் பகிர்வு, மைய மற்றும் பிரதேச அரசுகளுக்கான உறவுகள் எனப் பல்வேறு விடயங்கள் உள்ளன. ஆனால் எதுவித அடிப் படைத்திட்டமும் இல்லாமலேயே எந்த ஒரு அதிகாரப்பகிர்வுத் திட்டத்தையும் முன்வைத்துவிட முடியாது எனத்தெரிவித்தார்.

# இடப் பற்றாக்குறை காரணமாக 96 அகதிகள் வேறிடம் மாற்றம்



கடலூர் —

இராமேஸ்வரம் மண்டபம் அகதிகள் முகாமிலிருந்து இடப்பற்றாக்குறை காரணமாக 32 குடும்பங்களைச் சேர்ந்த இலங்கை அகதிகள் 96 பேர் அம்பலவாணன்பேட்டை முகாமுக்கு அழைத்து வரப்பட்டனர்.

கடந்த சில நாட்களாக இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் - இராணுவத்தினருக்கும் போர் ஏற்பட்டுள்ளதால், இலங்கையில் வாழும் தமிழர்கள் அகதிகளாக இராமேஸ்வரத்துக்கு படகுகள் மூலம் வந்தனர்.

இவர்கள் மண்டபம் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து அகதிகள் வந்து கொண்டிருப்பதால் மண்டபம் முகாமில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மேலும், அகதிகளின் உறவினர்கள் தமிழகத்தில் பல இடங்களில் உள்ள முகாம்களில் தங்கியுள்ளதாலும், அவர்களுடன் தங்க விருப்பம் உள்ளவர்கள் அந்தப் பகுதியிலுள்ள முகாம்களுக்கு அனுப்பிவைக்க ஏற்பாடும் செய்யப்பட்டுவருகிறது.

இதன்படி, இராமேஸ்வரம் - மண்டபம் முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை 4.30 மணிக்கு 32 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேர் பஸ் மற்றும் வான் மூலம் குள்ளஞ்சாவடி அருகேயுள்ள அம்பலவாணன் பேட்டை முகாமுக்கு அழைத்துவரப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து, இவர்களுக்கு அரசு வழங்கும் உதவித் தொகை மற்றும் நிவாரணப் பொருட்கள் முறையாக வழங்கப்படுமெனத் தாசில்தார் பிரபாகரன் தெரிவித்தார்.

# புலிகளின் கருத்துக்களை வெளியிடும் ஊடகங்கள் மீது மகிந்த அதிருப்தி



கொழும்பு —

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்களின் கருத்துக்களை வெளியிடும் கொழும்பு ஊடகங்கள் மீது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடும் அதிருப்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதனை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அரசாங்கத்துக்கு இணையாக திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் உள்ளிட்ட பல்வேறு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்களின் கருத்துக்களைப் பதிவு செய்வதானது -

பயங்கரவாதிகளை உயர் நிலைக்கு உயர்த்துவதாகும் என்றும் ஜனாதிபதி மகிந்த கூறியுள்ளார்.

மேலும் ஊடகங்களுக்கான வழிகாட்டும் விதிகள் குறித்த உருவாக்கத்தின்போது இத்தகைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் முன்வைக்கப்படும் என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

## 25ஆயிரத்துக்குக் கூடுதலாக

# ஓய்வூதியம் பெறுபவர்களிடம் முத்திரைவரி அறவிட முடிவு!

கொழும்பு —

மாதாந்தம் 25 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாக ஓய்வூதியம் பெறுபவர்களிடமிருந்து இந்த வருடம் முதல் முத்திரைவரியை அறிவிடுவதற்கு ஓய்வூதியத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

2006 இல 12 ஆம் இலக்க முத்திரைவரி முறைமைச் சட்டத்தின்கீழ் இந்த முத்திரைவரி அறவிடப்படவுள்ளதாக ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் திலகரட்ண தெரிவித்தார்.

முத்திரை வரித்திட்டத்தின் கீழ் 25 ஆயிரம் தொடக்கம் 39 ஆயிரத்து 999 ரூபா வரை ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 25 ரூபா வரியும், 40 ஆயிரம் தொடக்கம் 49 ஆயிரத்து 999 ரூபா வரை 40 ரூபா வரியும், 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொகைக்கு 50 ரூபா வரியும் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் 25 ஆயிரத்துக்குக் குறைவாக ஓய்வூதியம் பெறுபவர்களிடமிருந்து எந்தவொரு வரியும் அறிவிடப்படமாட்டாது எனவும் ஓய்வூதியத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. (தே)

# தொலைபேசி கோபுரத்தில் குண்டு வெடிப்பு!

கொழும்பு —

கம்பஹா கிரிந்திவல பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த தொலைபேசி கோபுரங்களில் பொருத்தப்பட்டிருந்த அதிசக்தி வாய்ந்த மூன்று குண்டுகளில் ஒன்று வெடித்ததால், அந்தக் கோபுரங்களில் ஒன்றுக்குப் பாரிய சேதமேற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 31 ஆம் திகதி இரவு இந்தக் குண்டு வெடித்தது. இந்தச் சம்பவம் தொடர்பாகத் தொலைபேசிக் கம்பனியின் அதிகாரியொருவர் தெரிவித்ததைத் தொடர்ந்து, பொலிஸார் குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் பிரிவினருடன் தொலைபேசி கோபுரங்களை சோதனை செய்தபோது, அதில் பொருத்தப்பட்டிருந்த அதிசக்தி வாய்ந்த இரண்டு குண்டுகள் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டன.

அந்தக் குண்டுகளுடன் டெட்னேற்றர்கள் மற்றும் வயர்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

வெடித்த குண்டின் சத்தம் நகரைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் கேட்டதாகவும் இது இடிமின்னல் தாக்குதலாக இருக்கலாமெனத் தெரிவித்து கணக்கிலெடுக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்தப் பகுதிப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆனந்த தேசப்பிரிய தெரிவித்தார். (தே)

# மின்சாரம் சீரின்மைக்கான காரணம் தொழில்நுட்பப் பற்றாக்குறையே!

## வடபிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவும் மின் சாரம் சீரின்மைக்குக் காரணம் மின் வழங்கும் தனியார் நிறுவனங்களுக்கிடையேயான தொழில் நுட்பப் பற்றாக்குறையே என வட பிராந்திய மின் சாரசபை முகாமையாளர் வீ. சண்முகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த தாவது -

யாழ். குடாநாட்டுக்கு மின் விநியோகம் மின் பிறப்பாக்கிகள் மூலமே வழங்கப்பட்டு வருகிறது.

காங்கேசன்துறையில் 15 மெகாவாட்ஸ் மின் உற்பத்தி செய்யக்கூடிய தனியார் மின் நிலை யம் செயற்படுகிறது. சுன்னாகத்திலும் அதே வலு வான வேறொரு தனியார் மின் நிலையம் செயற் படுகிறது. இதேவேளை அரசுக்குச் சொந்த மான மின் நிலையம் ஒன்று சுன்னாகத்தில் 4 மெகா வாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்து வருகிறது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு கோம்பயன் மணல், வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை - 3, சாவகச் சேரி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை என்ற ஆறு பெரும்பாகப் பிரிவுகளுக்கும் வழங்கினால் உற் பத்தி செய்யப்படும் மின்சாரம் யாழ். குடாநாட்டு க்குப் போதுமானதாக இருக்கும்.

ஆனால், தற்போது மின்உற்பத்தியில் ஈடு பட்டுள்ள தனியார் நிறுவனங்களுக்கிடையில் தோன்றியுள்ள சிக்கல் நிலையால் - அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு பகிர்ந்தளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களுக்கு இடையில் நிலவும் தொழில்நுட்பப் பற்றாக்குறையே மின் வெட்டுக் கான பிரதான காரணம். தற்போதை சிக்கல் நிலையால் காங்கேசன்துறையில் இயங்கும் தனியார் மின் பிறப்பாக்கி மூலம் கிடைக்கும் மின்சாரம் - கோம்பயன் மணலுக்கும், வட்டுக் கோட்டைக்கும் விநியோகிக்கப்படுகிறது.

அரச மின் பிறப்பாக்கி தனியே காங்கேசன் துறை -3 பிரிவுக்கும் - சுன்னாகத்தில் உள்ள தனியார் மின் பிறப்பாக்கி - சாவகச்சேரி, யாழ்ப் பாணம், பருத்தித்துறை போன்ற 3 பகுதிக ளுக்கும் விநியோகம் செய்கிறது.

சுன்னாகத்தில் உள்ள தனியார் மின்பிறப் பாக்கிகள் இரவுவேளைகளில் அதிக வலுக்கொண்ட மின்சாரத்தை விநியோகிப்பதால், இதனை மற் றைய இரு மின் பிறப்பாக்கிகள் மூலம் நிவர்த் திக்க முடியாத ஒரு தொழில்நுட்பப் பற்றாக்குறை நிலவுகிறது. இதனால்தான் மின் வெட்டை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது.

காங்கேசன்துறை, சுன்னாகம் (அரச மின் பிறப்பாக்கி) மூலம் உற்பத்தியாகும் மின்சாரம் தேவைக்கும் அதிகமாக இருந்தும் அதை மற் றைய பகுதிகளுக்கு வழங்க முடியாத ஒரு சிக்கல் நிலை தோன்றியிருப்பதாலேயே மூன்று முறை சுழற்சிமுறையில் மின்வெட்டை அமுல் படுத்த வேண்டியுள்ளது.

மாலை 6.45 மணி முதல் 7.30 மணி வரையும் - 7.30 தொடக்கம் 8.00 மணி வரை யும் - 8.00 மணி முதல் 8.45 மணி வரையும் சுழற்சிமுறையில் மின்வெட்டு ஒவ்வொரு பகுதிக் கும் மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு மின்வெட்டு ஒரு பகுதியில் மேற் கொள்ளப்படும்போது மின்சாரம் மேலதிகமாகக் காணப்படுவதாகவும், ஆனால் அதை மக்க ளுக்கு முழுமையாக வழங்க முடியாமையால் மின்சார சபைக்கே பாரிய நஷ்டம் ஏற்படுவதா கவும் சபைத் தலைவர் தெரிவித்தார்.

இந்த இரு தனியார் நிறுவனங்களுடனும் பேச்சுக்கள் நடத்தியும் இந்தச் சிக்கல் நிலைக்குத் தீர்வுகாணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மாற்று வழிகள் ஏதாவது மேற்கொண்டு, பூரண மான மின் விநியோகத்தை மக்களுக்கு வழங் குவதற்கு மின்சாரசபை முயற்சிகளை மேற் கொண்டு வருகிறது.

ஆனாலும், இந்த மின்வெட்டைக் குறைப் பதற்கு பாவனையாளர்களின் ஒத்துழைப்பும் அவசியம் தேவையாகும். இரவு வேளைகளில் தமது மின் பாவனையைக் கட்டுப்படுத்தி, குறைந் தளவான மின்சாரத்தைப் பயன்படுத்தினால் அனைவருக்கும் 24 மணிநேர மின்சாரத்தை வழங்க முடியும் என்றும் அவர் விளக்கமளித்தார்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### சின்னமடு மாதா ஆலய யாத்திரைத் திருவிழா

யாழ்ப்பாணம் —

சின்னமடுமாதா ஆலயத்தின் வருடாந்த யாத்திரைத் தலத் திருவிழா கடந்த மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் திருப்பலிப் பூசையில் இன்று காலை 7.30 மணியளவில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

### யாழ். கல்வி வலயப் நாட்டுக்கூத்து போட்டி

நல்லூர் —

யாழ்ப்பாண கல்வி வலய மாணவர்களுக் கான நாட்டுக்கூத்து போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் காலை 8.30 மணியளவில் இந்தப் போட்டி ஆரம்ப மாகவுள்ளதால் - குறித்த நேரத்துக்கு முன்னர் போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களை அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி செல்வரட்ணம் கேட்டுக்கொண்டுள்ளார்.

### இலவச மருத்துவ முகாமும் பிறப்பு, இறப்பு, திருமண பதிவும்

யாழ்ப்பாணம் —

மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில் மாபெரும் இலவச மருத்துவ முகாமையும், பிறப்பு- இறப்பு மற்றும் திருமண பதிவையும் எதிர்வரும் 9 ஆம் திகதி சாவகச்சேரி லயன்ஸ் கழகம் அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி மேற்கொள்ளவுள்ளது.

கழகத்தின் தலைவர் லயன் வடிவேல் ஸ்ரீ பிரகாஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மருத்துவ முகாமில் - லயன் டொக்டர் எஸ்.எஸ் அருளானந்தம் தலைமையிலான குழுவினர் இலவச மருத்துவ பரிசோதனைகளை மேற் கொள்ளவுள்ளனர்.

### வாக்காளர் பதிவை மேற்கொள்ளவும்

குரும்பசிட்டி —

குரும்பசிட்டியைச் சேர்ந்த 18 வயதை அடைந்தவர்கள் வாக்குரிமைப் பதிவை மேற் கொள்ள குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

நாளைமறுதினம் காலை 9 மணிக்கு வசா விளான் மத்திய மகாவித்தியாலயத்தில் இதற் கென கிராம அலுவலரும், ஏனைய உத்தியோகத் தர்களும் சமூகமளிக்கவுள்ளனர்.

ஜே/242 -243 கிரம அலுவலர் பிரிவுக ளைச் சேர்ந்தவர்கள் தத்தம் அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழ் பிரதிகளைக் கொண்டு அன்றைய தினம் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கட்டுவன், கீரிமலை, மயிலிட்டி ஆகிய பகுதிக ளைச் சேர்ந்தோரும் பதிவுகளை மேற்கொள்ள லாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வரலட்சுமி விரதம்

மானிப்பாய் —

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இன்று காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை வரலட்சுமிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று சுவாமி வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து நோன்பு நோர்க்கும் அடியார்க ளுக்கு சிவாச்சாரியார்களால் நூல் கட்டுதலும், பிரசாதம் வழங்கலும் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (100)

* * *

சித்தன்கேணி

சித்தன்கேணி சிவன்கோவில் வரலட்சுமி விரத விழா இன்று காலை 9 மணிக்கு இடம்பெற வுள்ளது. மகாலட்சுமிக்கு விசேட ஆராதனைக ளும், வரலட்சுமிக்கு கும்ப பூசையும் நடைபெறுவ தோடு, காப்புக்கட்டுதல் வைபவமும் நடைபெற வுள்ளது (48)

## யாழ். கன்னாதிட்டி வீதியிலுள்ள நகைக்கடை உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் கன் னாதிட்டிச் சந்திக்கு அருகில் 135 ஆம் இலக்க நகைக்கடை நேற்று இரவு உடைத்துத் திருடப் பட்டுள்ளது.

இந்தக் கடையின் ஓட்டைக் கழற்றிய திரு டர்கள் உள்ளிறங்கித் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணியள வில் நகைக்கடை உரிமையாளர் நகைக் கடை யைப் பூட்டிவிட்டு வீடு திரும்பினார் என்றும், மறுநாள் காலை கடையைத் திறக்கும் போதே கூரை பிரிக்கப்பட்டிருந்ததை தான் கண்டதாகவும் கடை உரிமையாளர் தெரிவித்தார்.

இந்தத் திருட்டின் போது 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பவுண் சேதார மூடை ஒன்றும், 8 ஆயிரம் ரூபா பெறுமதியான வெள்ளிகளும், கடையில் நகைகளை நிறுப்பதற்கென பாவிக் கப்பட்டு வந்த இலத்திரனியல் தராசு ஒன்றும் திரு டப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசிய கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமா முடித்த ஆசிரியருக்கு சொந்த மாவட்டத்தில் நியமனம்

யாழ்ப்பாணம் —

தேசிய கல்வியியல் கல்லூரி ஆசிரியர் டிப் ளோமா சான்றிதழ் பெற்ற ஆசிரியர்களின் நிய மனத்தில் ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்து, அவர்களை தமது சொந்த மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங் கும் நடவடிக்கைகள் கல்வி அமைச்சின் மேன் முறையீட்டு பிரிவால் மேற்கொள்ளப்படுகி றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் தமது சொந்த இடங்களுக்கு இடமாற்றம் வழங்குமாறு மேன்முறையீடு செய் திருந்தனர்.

அவர்களில் கணிசமான தொகையினரின் பெயர்ப் பட்டியல் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்தே டிப்ளோமா ஆசிரியர்களை சொந்த மாவட் டத்துக்கு இடமாற்றம் செய்யும் பணிகள், கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த வின் விசேட பணிப்புரையின் கீழ் நடைபெற்று வருகின்றன.

## வழுக்கையாறின் கட்டுமானத்தை ஆரம்பிக்க சூழல் தாக்கம் பற்றிய அறிக்கை தேவை

### உலக வங்கி நியாப்பிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம் —

வழுக்கையாறு திட்டத்தின் கட்டு மான வேலைகளை மேற்கொள் ளும்போது புனரமைப்பால் ஏற்படக் கூடிய சூழல்தாக்கம் பற்றிய அறிக்கை தேவையென உலகவங்கி நியாப் நிறுவனத்தைக் கேட்டுள்ளது.

அதற்காக கலாநிதி ஜெயசிங்கம் தலைமையில் பேராசிரியர் சண்முக லிங்கம், பேராசிரியர் நித்தியானந் தன், பொறியியலாளர் சபாரத்தினம் ஆகியோர் கொண்ட குழு அந்த அறிக் கையைத் தயாரிக்கிறது.

மேலும் தற்பொழுது தயாரிக்கப் பட்டுவரும் அந்த அறிக்கையின் இறுதி முடிவு இன்னும் சில தினங்க ளில் எட்டப்பட்டு விரைவில் கைய ளிக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்தே புனரமைப்பு வேலை கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

### முன்பள்ளி விளையாட்டு போட்டி

மானிப்பாய் —

இளவாலை காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையத்தின் நுண்மதி முன்பள்ளி யின் வருடாந்த விளையாட்டு போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (100)

## யாழ். வலயக் கல்விப் பணிமனையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைப்பு

நல்லூர் —

யாழ். வலயக் கல்விப் பணிமனை யில் சைக்கிள்கள் நிறுத்துவதற்கான கொட்டகை அமைக்கப்பட்டு வருகி றது.

நீண்ட காலமாக பணிமனை யில் கொட்டகை அமைக்கப்படாத தால் அங்கு பணிபுரியும் ஊழியர்கள், திணைக்களத்துக்கு வரும் ஆசிரியர் கள், அதிபர்கள் மற்றும் பலதரப்பின ரும் சிரமங்களை எதிர்நோக்கி வந் தனர்.

இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையிலேயே பதினை யாயிரம் ரூபா செலவில் சைக்கிள் கொட்டகை அமைக்கப்பட்டு வருகிறது.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : கு.திவாஜினி
முகவரி : சமரபாகு.

## வாழ்க வளமுடன்




## ஓய்வூதிய புதிய சுற்று நிருபம்

யாழ்ப்பாணம் —

கல்வி நிர்வாக சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்களின் ஓய்வூதியத்தை திருத்தி அமைப்பதற்கான புதிய சுற்றறிக்கை ஓய்வூதியத் திணைக்கள பணிப்பாளர் கே.ஏ திலகரட்ணவால் வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் அதிபர், ஆசிரியர் கல்வி நிர்வாக சேவையில் இருந்து ஓய்வு பெற்ற, ஓய்வு பெற விரும்புபவர்களின் ஓய்வூதியம் மறுசீரமைப்புக்கு உள்ளாக்கப்பட வுள்ளது.

## மத்தியஸ்தர் தினவிழா

யாழ்ப்பாணம் —

யாழ். மத்தியஸ்தர் சபையின் மத்தியஸ்தர் தினவிழா எதிர்வரும் நாளை மறுதினம் 10 மணிக்கு வைத்தீஸ்வரக் கல்லூரியில் யாழ்.மத்தியஸ்தர் சபை தலைவர் வி.ஸ்ரீ சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நீதிபதி க.விக்னராஜா, மல்லாக மாவட்ட நீதிபதி சறோஜினி இளங்கோவன், யாழ் பிரதேச செயலர் பற்றிக் நிரஞ்சன் ஆகியோர் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளனர்.

கல்லூரி அதிபர் வன்னியசிங்கம் மத்தியஸ்த பயிற்றுனர் கணேசராசா, மத்தியஸ்த சபை அமைப்பாளர் ஜனார்த்தனசர்மா, முன்னாள் மாவட்ட நீதிபதி திருநாவுக்கரசு, முன்னாள் கல்விப்பணிப்பாளர் வேலாயுதம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## --- நல்லூரில் இன்று ---

மானிப்பாய் —

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவை முன் னிட்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இன்று மாலை 3 மணிககு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும்.

இந்த நிகழ்வில் - 'கார்த்திகைப் பெண்கள்' என்னும் கருப்பொருளில் அபி விருத்தி உதவியாளர் சீ.மகிந்தினி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். இதைத் தொடர்ந்து திருநெல்வேலி அபிவிருத்திச் சைவ அபிவிருத்திச் சங்க அறநெறிப் பாடசாலை மற்றும் யாழ். கே.கே.எஸ்.வீதி பன்றிக்கோட்டுப் விஸ்வலிங்கப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெறும். (100)

# கிராமிய அபிவிருத்தி வங்கியின் பள்ளிச் சேமிப்பு அலகு திறப்பு விழா

கிளிநொச்சி ———

கிராமிய அபிவிருத்தி வங்கியின் பள்ளிச் சேமிப்பு அலகு 4 ஆவது கிளை திறப்புவிழா நிகழ்வு கிளிநொச்சி தருமபுரம் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் பாடசாலை மாணவன் தமிழ்ச் செல்வன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை கிளிநொச்சி தருமபுரம் மகாவித்தியாலய அதிபர் ச.பூலோகராசா ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் முகுந்தனும், ஈகச்சுடரை தருமபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் புஸ்பராசா, ஆசிரியர் சிவரூபன் ஆகியோரும் ஏற்றினர்.

கிராம அபிவிருத்தி வங்கியின் பள்ளிச் சேமிப்பு கட்டடத்தின் பெயர்ப் பலகையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

வங்கிஅலுவலகத்தை மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் முகுந்தன் நாடாவை வெட்டித் திறந்து வைத்து, வங்கியில் பாடசாலை மாணவர்களுக்கான கணக்கை ஆரம்பித்து வைத்தார்.

மண்டப நிகழ்வுகளைத் தொடர்ந்து கருத்துரைகளை பாடசாலை அதிபர் பூலோகராசா, கிராமிய அபிவிருத்திச் சங்கத் தலைவர் புஸ்பராசா, பாடசாலை ஆசிரியர் சிவரூபன், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஆற்றினார்.

இதேவேளை கிராமிய அபிவிருத்தி வங்கியினரால் தருமபுரம் மகாவித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

புத்தகத் தொகுதியை மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் முகுந்தன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் வழங்க - பாடசாலை அதிபர் பூலோகராசா பெற்றுக் கொண்டார்.

தருமபுரம் பாடசாலையில் 300 மாணவர்கள் பள்ளிச் சேமிப்பை கிராமிய அபிவிருத்திக் கிளையில் ஆரம்பித்துள்ளனர்.

இதில் கூடுதல் சேமிப்பு செய்த மூன்று மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

## மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா நிகழ்வு

கிளிநொச்சி ———

தமிழீழ மாணவர் அமைப்பின் வெளியீடான பா.திலகானந்தம் எழுதிய 'மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழிகாட்டி' என்னும் நூல் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றினார்.

ஆசியுரையை கற்சிலைமடு அ.த.க.பாடசாலை அதிபரும், கருத்துரையை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணனும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டு விழா ஆரம்பமானது. முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் முதல் பிரதியை வழங்க எழுத்தாளரும், ஆங்கில ஆசிரியருமான இ.றஜித் அதனைப் பெற்றுக் கொண்டார். நூலின் மதிப்பீட்டுரையை ஆசிரியை நந்தினி நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வுக்கு எழுத்தாளர்கள், போராளிகள்மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரைச் சேர்ந்த 9 ஆசிரியர்களுக்கு சொந்த மாவட்டத்தில் நிரந்தர நியமனம்

## கல்வி அமைச்சின் மேல் முறையீட்டுச் சபை அறிவிப்பு

மன்னார் ———

கல்வியியல் கல்லூரி டிப்ளோமா நெறியை 2005ஆம் ஆண்டில் பூர்த்தி செய்த மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 9 டிப்ளோமா ஆசிரியர்களுக்கு வேறு மாகாணங்களில் நியமனம் வழங்குவதற்கான நேர்முக பரீட்சை அழைப்புகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

தற்போதைய சூழ்நிலையில், சந்தேகத்தின் பேரில் கைதுகள் மற்றும் வாழ்க்கைச் செலவு ஏற்றமடைந்து காணப்படும் நேரத்தில் வேறு மாகாணங்களுக்கு நியமனம் பெற்றால் பன்மடங்கு செலவினங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். அதற்கும் மேலாக மன்னார் மாவட்டத்தில் அதிகளவான ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுவதால், சொந்த மாவட்டத்துக்கே நியமனம் பெற்றுத் தரும்படி சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன்,வினோநோதராதலிங்கம் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஆசிரியர்களின் வேண்டு கோளுக்கிணங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தவிடயத்தை கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்தவின் கவனத்துக்கு கொண்டு வந்து அவரின் ஒப்புதல் மூலம் மேன்முறையீட்டு விண்ணப்பங்கள் கல்வி அமைச்சின் மேல் முறையீட்டுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தற்போது மேன்முறை யீட்டுச் சபையால் இவர்களுக்கு சொந்த மாகாணத்திலேயே நியமனம் வழங்கப்படவுள்ளது.

## திருத்தப்படாத வீதி

கிளிநொச்சி ———

பல்லவராயன் கட்டு வேரவில் வீதி பல வருடங்களாகப் புனரமைப்பு செய்யப்படாமல் உள்ளதால், அந்த வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியாமல் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

மழைக்காலத்தில் இந்த வீதியால் பிரயாணம் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் ஆகையால் -

அதற்கு முன்னர் இந்த வீதியைப் புனரமைப்புச் செய்து மக்களின் போக்குவரத் துக்கு உதவுமாறு உரிய அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சுனாமி பாதித்த இளைஞர்களுக்கு இயந்திரம் திருத்தும் பயிற்சி நெறி

வடமராட்சி கிழக்கு ———

வடமராட்சி கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆழியவளை இளைஞர்களுக்கு கண்ணாடி இழைப் படகின் வெளிஇணைப்பு இயந்திரங்களை திருத்தும் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் பயிற்சி வகுப்பில் முதற்கட்டமாக பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்ட 40 இளைஞர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இந்தப் பயிற்சி வகுப்பிலிருந்து தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கிராம மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் - கடற்தொழில் உபகரணங்களை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நெடுங்கேணி மதியாமடுவில் நிரந்தர வீடுகளுக்கு அடிக்கல்

வவுனியா ———

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவின் மதியாமடு கிராமத்தில் 53 நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 31 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் நாகேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையில் வடக்கு - கிழக்கு சமுதாய மீள் கட்டமைப்பு (நிகொட்) திட்டத்தின் கீழ் - போரால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களின் வாழ்வாதார நிலையை கருத்திற்கொண்டே இந்த வீட்டுத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம் பெற்றது.

இதேவேளை, அன்றைய தினம் பிற்பகல் 3 மணியளவில் நெடுங்கேணி வடக்கு விஞ்ஞானக்குளத்திலும் நிரந்தர வீட்டுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் நெடுங்கேணி பிரதேச செயலர் க.பரந்தாமன், கிராம அரசியல்துறைப் பொறுப்பாளர் கபிலன், மதியாமடு பாடசாலை அதிபர் எஸ்.பரஞ்சோதி, தமிழர் புனர்வாழ்வுக் கழக சமூக வலுவூட்டாளர் புவனநாயகி, வவுனியா தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர் எஸ்.ரி.மூர்த்தி, கிராம அலுவலர் கோபால், பயனாளிகள் மற்றும் பொதுமக்களெனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.


இந்த வீட்டுத் திட்டத்துக்கான நிதிப் பங்களிப்பை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

வட்டக்கச்சி ———

வட்டக்கச்சி மகாவித்தியால பழைய மாணவர்கள் நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணியளவில் வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி கலைவாணி விளையாட்டு மைதானத்தில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி ஒன்றை நடத்தவுள்ளனர்.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்தும் போட்டியாளர்கள் பங்கு கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (09)



## ஈழத்தமிழரின் காவல் தெய்வம்!

ஈழத் தமிழரின் காவல் தெய்வமே!
வாழ வழிகாட்ட வேண்டுமையா!
நாளை நமக்கொரு தீர்வு வர
நல்ல வழிகாட்ட வேண்டுமையா!
நீள நினைப்பதற்குரிய தீர்வுக்கு நீதான்
வழிகாட்ட வேண்டுமையா!
வேலவா! ஈழத்தமிழரின் காவலா!
விடிவுக்கு வழிகாட்ட வேண்டுமையா!



மதுரகவி

## "அமைதி வேண்டும் அழகுக் குமரா"



வெள்ளி மயில் ஏறும் முருகா
வள்ளி மணவாளன் குமரா
கொடுமைகளை களைந்திடும்
கந்தா
வேற்றுமையை வேரறுக்கும்
வேலா
முத்தான முத்துக்குமரா
மூவிரு முகங்கள் முருகா
அமைதி வேண்டும் அழகுக்
குமரா
அருள் தருவாய் அழகுக்
கந்தா!

ப.நிதுஜா

## அடியார் அல்லல் அகற்றிடும் அமலன்

இணைந்தவா இறைவா கந்தா
எந்தனின் சிந்தை வந்து
இணைந்தவா எல்லை இல்லா
இறைவனே நிறைவாய் நாளும்
பிணைந்தவா பெரிய நல்லூர்
பேசிடப் பிரியாதென்றும்
அணைந்தவா அடியார் அல்லல்
அகற்றிடும் அமலா போற்றி!



மு.பாலசுப்பிரமணியம்

## பரமபதம் தந்திடுவாய்



தொல்லை வினை தீர்க்கின்ற தூயவனே முருகா
துதித்தோம் உனையே நற்கதி அருள்வாய்
நல்லை யிலுறைந்திடும் ஞான வடிவேலவனே
புள்ளி மயிலேறியே நீ அருட்காட்சி தாராய்
கல்லை யொத்த மனமும் கசிந்தே யுருகிடும்
கந்தனே உன்னாமம் நாவினாற் சொல்லவே
இல்லை யெனாது வரமீந்தருளும் இறைவா
இருகரங் கூப்பினோம் நிம்மதியைத் தருவாய்!

## நற்கதி அருள்வாய்

சிந்தையிலினித்திடும் சிங்கார வேலவனே
சிவனார் திருமகனே சண்முகனே குகனே
பந்தவினை யறுத்தே பரமபதம் தந்திடுவாய்
பாலசுப்பிரமணியனே கோலமயில் வாகனனே
உந்தனிரு திருவடியை இறுகவே பற்றினோம்
உன்னருளைத் தந்தே இன்னல் போக்கிடுவாய்
சந்ததமும் உனையே சதமென்று நம்பினோம்
சண்முகனே சரவணனே குமரனே சரணமையா.



## 6 ஆம் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

சிங்கார வேலனே!
சீர்மருவு நல்லூரில் திருவருள் தர ஓடி வா!
Rupa Versatile Trades
NO : 104, Stanley Road,
Jaffna.
T.P. NO : 021 -222 2479
[C/5493]

நமது ஈழநாடு

சிந்தனைக்கு
எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

## நமது நோக்கு

# காலத்தின் தேவை!

மூதூரில் இடம்பெற்றுவரும் மோதல்களின் போது - பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகள், வணக்கஸ்தலங்களில் தங்கியிருக்கின்றனர்.

உயிருக்கு அஞ்சி சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து பொது இடங்களில் தங்கியிருக்கும் மக்கள் மீது வான்வழி மற்றும் ஆட்லறித் தாக்குதல்களை அரச படைகள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மூதூர், தோப்பூர் பாடசாலைகளில் தங்கியிருந்த 18 முஸ்லிம் பொதுமக்கள் படையினரின் ஆட்லறி தாக்குதல்களில் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஐம்பது பேர் வரை காயமுற்றதாக கூறப்படுகிறது.

அதைவிட காயமுற்றோரை ஏற்றிச்சென்ற அம்புலன்ஸ் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு நோயாளிகள் மூவர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

மூதூர் நகரத்தின் கட்டுப்பாட்டை இழந்து போன ஆத்திரத்தில் இந்த உக்கிர வான் மற்றும் ஷெல் தாக்குதல்களைப் படைத்தரப்பு நடத்துவதாகவே தோன்றுகிறது.

ஏற்கனவே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள சம்பூர் பகுதி மக்களை அரச படைகள் வான் தாக்குதல்கள் மூலமும், ஷெல் தாக்குதல்கள் மூலமும் பெரும் துன்பத்துக்குள்ளாக்கி வந்தனர்.

இதன் விளைவாகவே, தாம் மனிதாபிமான நோக்குடன் மக்களைப் பாதுகாப்பதற்கான யுத்தத்தை நடத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாக விடுதலைப்புலிகள் கூறியிருந்தனர்.

இந்த நிலையில் அரச படைகள் பொதுமக்களின் வாழ்விடங்களையும், அகதி முகாம்களையும் இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்துவதானது-நிலைமை மேலும் மோசமடையவே வழி வகுக்கும்.

அதைவிட மூதூரில் நடைபெறும் படைநடவடிக்கைகளில் அரச படைகள் கண்டிருக்கும் பின்னடைவால் விரக்தியுற்று கிழக்கில் இனரீதியான முறுகலைத் தோற்றுவிக்கும் நோக்கத்தில்கூட நேற்று முஸ்லிம்களின் அகதிகள் முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம்.

முஸ்லிம் மக்கள் செறிவாக வாழும் மூதூர் பகுதியில் இப்படிப்பட்ட படுகொலைகளை நிகழ்த்தி விட்டு- அந்தப்பழியை புலிகள் மீது போட்டு, மலிவான அரசியல் லாபம் பெறும் முயற்சி முன்னெடுக்கப்படுகிறதா என்ற சந்தேகமும் உள்ளது.

இந்தக்கட்டத்தில், தமிழ்-முஸ்லிம் மக்களிடையே உறவைச் சீர்குலைத்து அரசு கிழக்கில் தனது படைகளின் பலத்தை அதிகப்படுத்த முனையக் கூடிய ஆபத்தும் உள்ளது.

எனவே, முஸ்லிம் மக்கள் இப்போது தான் மிகவும் நிதானமாகவும், பொறுமையுடனும் இருந்து கொண்டு தமிழ்-முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கும் சக்திகளை சரியாக இனங்காண வேண்டும்.

அரச தரப்புக்கு இப்போது நெருக்கடி உருவாகியிருப்பதால்-நிச்சயமாக கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு- அந்தப்பழியை புலிகள் மீது போடும் முயற்சியில் இறங்கும்.


முஸ்லிம்களுக்கு ஆதரவாக சர்வதேசத்தில் குரலெழுப்பி அதை தனக்கு அனுதாபமாக்க சிங்கள பேரினவாத சக்திகள் எத்தனிக்கலாம்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு மூதூர் விடயத்தில்- முஸ்லிம் அரசியல், சமூக பிரதிநிதிகள் தமது நடவடிக்கைகளிலும், பேச்சிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

தமிழினம் ஒருபோதும் முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளுக்கு எதிராக இருக்கமாட்டாது என்பதையும்-கிடைக்கக்கூடிய எந்தப்பலனையும் கூட்டாக அனுபவிக்கமுடியுமென்பதையும் உணர்ந்து முஸ்லிம் சமூகம் நடந்து கொள்வதே இன்றைய தேவைப்பாடாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# மக்களைக் காக்கும் மனிதாபிமான தாக்குதலை புலிகள் நடத்துகின்றனர்

## சுவிஸ் தமிழர் பேரவை அறிக்கை

திருகோணமலை —

தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போது ஒரு மனிதாபிமானத்துக்கான தாக்குதலையே நடத்தி வருகின்றனர் என்று சுவிஸ் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சுவிஸ் தமிழர் பேரவையின் தலைவர் இராமகிருஸ்ணன் காசிலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கையில் இடம்பெற்று வரும் அண்மைக்கால நிகழ்வுகள் தொடர்பாக சுவிஸ் தமிழர் பேரவையும், சுவிஸ் வாழ் தமிழ் மக்களும் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளனர்.

சர்வதேச சமூகம் தனது முழுக் கவனத்தையும் மத்திய கிழக்கு யுத்தத்தின் பால் வைத்துக்கொண்டிருக்கும் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை இராணுவ இயந்திரம் தனது கொடூரக் கரங்களை அப்பாவித் தமிழர்கள் மீது நீட்ட ஆரம்பித்திருந்தது.

'மாவிலாறு' தண்ணீர்ப் பிரச்சினையைக் காரணம் காட்டி தமிழ் மக்கள் மீது ஒரு முழு அளவிலான யுத்தத்தை அது கட்ட விழ்த்து விட்டிருந்தது.

கடந்த 26 ஆம் திகதி முதல் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள்மீது கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுக்களையும், ஷெல் தாக்குதல்களையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தது.

எந்தவித வரையறையும் இல்லாமல் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கண்மூடித்தனமான தாக்குதல்களால் பல அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். பல வீடுகள், பாடசாலைகள் முற்றாகச் சேதமாக்கப்பட்டன. ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்திருந்தார்கள். விடுதலைப் புலிகளின் ஒரு சில முக்கியஸ்ர்களும் இந்த வான் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

இவற்றுக்கு மேலாக கடந்த 31 ஆம் திகதி இராணுவத்தினர் திருகோணமலையிலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது ஒரு பகிரங்கமான படையெடுப்பை மேற்கொண்டிருந்தனர்.

யுத்த விமானங்கள், குண்டு வீச்சுக்கள் கண்மூடித்தனமாக மேற்கொள்ள பீரங்கி, கவச வாகனங்கள் சகிதமாக இராணுவத்தினர் மூன்று முனைகளில் நகர்வை மேற்கொண்டனர். சுமார் நான்கரை வருடங்களாக இலங்கையில் இடம்பெற்று வந்த போர் நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் அரசாங்கம் விடுத்த ஒரு பகிரங்க யுத்தப் பிரகடனம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

யுத்த இயந்திரம் கட்டவிழ்த்து விட்டிருந்த இந்தத் தொடர் தாக்குதல்களால் தமிழர் தாயகத்தில் குறிப்பாக திருகோணமலைப் பிரதேசத்தில் ஒரு மனிதாபிமான நெருக்கடி தோன்ற ஆரம்பித்தது.

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் அப்பாவித் தமிழ்ப் பொது மக்களைக் காப்பாற்றவேண்டிய ஒரு தார்மீகக் கடமையின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு தற்காப்பு தாக்குதலை மேற்கொண்டேயாக வேண்டிய ஒரு நெருக்கடிக்குத் தள்ளப்பட்டார்கள்.

அதன் அடிப்படையில் கடந்தபுதன் கிழமை அதிகாலை தமிழீழ விடுதலைப் புலிகள் திருகோணமலை மூதூர் பிரதேசத்திலுள்ள படைகளின் ஆட்லறித் தளங்களைக் குறிவைத்து பதில் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர்.

இது தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்கும், தம்மீது வலிந்து தொடுக்கப்பட்ட ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தில் இருந்து மீள்வதற்குமான ஒரு தற்காப்பு நடவடிக்கையே.

தண்ணீர் பங்கீடு தொடர்பான ஒரு சிறு பிணக்கைத் தீர்ப்பதற்கு முழு அளவிலான ஒரு யுத்தத்தை ஆரம்பித்திருந்த மகிந்த ராஜபக்ஷவே தற்போதைய அழிவுக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சுவிஸ் தமிழர் பேரவை கோரிக்கை விடுக்கின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையிலும், முப்படைகளின் தளபதி என்ற வகையிலும் நான்கரை ஆண்டுகளாக இடம்பெற்று வந்த போர் நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து யுத்தப் பிரகடனத்தை மேற்கொண்டவர் என்ற வகையில் மகிந்தவின் இந்த யுத்த நடவடிக்கையை சுவிஸ் வாழ் தமிழ் சமூகம் வன்மையாகக் கண்டிக்கின்றது என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# அடுத்த வருடம் முதல் உயர்தரப்பரீட்சையை ஓகஸ்ட் மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானம்

கொழும்பு —

அடுத்த வருடம் முதல் க.பொ.த உயர் தரப் பரீட்சையை ஓகஸ்ட் மாதத்தில் நடத்துவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

ஏப்ரல், மே மாதங்கள் திருவிழாக் காலங்கள் எனக்கருதப்படுவதால் பரீட்சையை நடத்துவதற்கு பொருத்தமான காலத்தை பரிந்துரைக்குமாறு ஜனாதிபதி செயலகத்தால் கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரத்ன ஹேவகேக்கு விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கமைய, அது குறித்த விடயங்களை ஆராய்ந்த பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டதாக கல்வியமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதையடுத்தே விழாக்காலங்களில் பரீட்சைகள் நடத்தப்படும் செயற்பாடுகள் மாற்றப்படுமென மகிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதி செயலகத்தால் தெரிவிக்கப்பட்ட இந்த அறிவித்தலை கவனத்திலெடுத்த கல்வியமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் அடுத்த வருடம் முதல் உயர் தரப் பரீட்சையை ஓகஸ்ட் மாதம் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இதன்படி அடுத்த வருடம் தொடக்கம் ஓகஸ்ட் முதல் வாரத்தில் பரீட்சை நடைபெறும். குறித்த வருடமுடிவுக்குள்ளாகவே பெறுபேற்றை வெளியிட்டு பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக பரீட் சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

தற்போது உயர்தரப் பரீட்சை ஏப்ரல், மே மாதங்களிலேயே நடைபெற்று வருகின்றது. இந்த இரு மாதங்களிலும் பரீட்சை நடைபெறும் போது தமிழ், சிங்கள புதுவருடம் மற்றும் வெசாக் விழாக்கள் இடம் பெறுவதால் உயர் தரப்பரீட்சையை நடத்துவதற்கு பொருத்தமான மாதத்தை ஆலோசித்து அனுப்புமாறு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க கல்வியமைச்சின் செயலாளருக்கு அறிவித்திருந்தார்.

அதன்படி உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கு பொருத்தமான மாதத்தை தீர்மானிப்பதற்காக பல்கலைக்கழகங்களின் மானியங்கள் ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவகம், பரீட்சைகள் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கல்வியமைச்சின் செயலாளர் ஆரியரத்ன ஹேவகேயுடன் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் உயர்தரப்பரீட்சையை ஓகஸ்ட் மாதத்தில் நடத்துவதென தீர்மானித்த பின்னர் அது குறித்து ஜனாதிபதியின் செயலாளருக்கும், கல்வியமைச்சுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (தே)

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?04.08.2006 - 10.08.2006

| | | | |
|---|---|---|---|
| ராகு | | | புத சுக் |
| யுரே | 05 மா 5.09 கட - புத<br>05 இ 12.14 தனு - சந்<br>07 பி.இ 2.45 கட - சுக்<br>07 பி.இ 3.20 மக - சந்<br>09 பி.இ 3.59 கும் -சந் | | சூ சனி |
| நெப் | | | செவ் |
| | சந் | குரு | கேது |

## மேடம்

(அஸ்வினி , பரணி, கார்த்திகை 1 ஆம் கால்)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சச்சரவுகள் இருந்து கொண்டிருக்கும். நிம்மதி குறையும். எதிர்பாராத செலவுகள் வந்து சேரும். பொதுவாக நிதிப் பற்றாக் குறை இருக்கும். வரவிலும் பார்க்கச்செலவு அதிகரிக்கும். சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவும். எடுத்த கருமங்கள் வெற்றியளிக்காது. புத்திரர்கள் தொல்லை தருவார்கள். விவாக கருமங்கள் ஏமாற்றத்தைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். அதிகாரிகளின் கெடுபிடிக்கு ஆளாக வேண்டியிருக்கும். வீண் தொல்லைகள் வந்து சேரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறையும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். தொழிலாளர்களுக்குத் தொழில் வாய்ப்பு குறையும். பிரயாசைக்கேற்ற வருவாய் கிடையாது. மாணவர்களுக்குக் கல்வியில் நாட்டம் குறையும்.

## இடபம்

(கார்த்திகை 2,3,4,ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் கால்கள்)



இடபராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்வு நன்றாக இருந்தாலும் இடையிடையே சச்சரவுகள் தோன்றி மறையும். தொடங்கும் முயற்சிகள் தாமதத்தின் மேல் கைகூடும். பணவரவு சுமாராக இருக்கும். குடும்பப் பெண்கள் சிக்கனம், பொறுமை என்பவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும். விவாக கருமங்கள் தாமதத்தின் மேல் நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு காரியாலயத்தில் ஓரளவு மதிப்புண்டு. உயர்வுகள் தள்ளிப்போகும். பிரயாணங்களில் அலைச்சல் ஏற்படும். வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் ஓரளவு லாபம் கிட்டும். வாடிக்கையாளர்களை அணைத்தால் முன்னேற்றமுண்டு. தொழிலாளர்களுக்கு கடின முயற்சியின் மேல் லாபமுண்டு. ஒப்பந்த வேலைகள் தாமதமாகும். மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கம் அவசியம்.

## மிதுனம்

(மிருக சீரிடம் 3,4 ஆம் கால்கள், திருவாதிரை , புனர்பூசம் 1,2,3 ஆம் கால்கள்)



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நல்லறமாக நடக்கும். குடும்பத்தில் கணவன், மனைவி அந்நியோன்யம் சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வருவாய் கிடைக் கும். தேகசௌகரியம் நன்றாக இருக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். விவாகப் பேச்சுகள் நல்ல பலனைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு அபிலாஷைகள் நிறைவேறும். உயர்ச்சிகள் தேடிவரும். மதிப்பும், கௌரவமும் பெருகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். ஏற்றுமதி, இறக்குமதி முன்னேற்றம் காணும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பு பெருகும். புதுத் தொழிலை ஆரம்பிக்கலாம். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தி உண்டு.

## கடகம்

(புனர்பூசம் 4ஆம் கால், பூசம், ஆயிலியம்)



கடகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அமைதி நிலவும். பொருளாதாரம் முதலியன திருப்தியாக இருக்கும். தொடங்குங் கருமங்கள் சுமுகமாக நிறைவேறும். உறவினர்கள், அயலவர்கள் ஆகியோரின் உதவிகள் கிடைக்கும். பெரியோர்களின் ஆசிகள் கிட்டும். விவாக கருமங்கள் மனம் போல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு கௌரவம் சிறக்கும். கீழ் உத்தியோகத்தர்கள் பணிந்து நடப்பர். அதிகாரிகளின் அனுசரணை கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வாடிக்கையாளர் வரவு அதிகரிக்கும். வங்கி உதவிகள் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிட்டும். தொழில் மூலம் வருவாய் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம், சித்தியுண்டு.

## சிங்கம்

(மகம் , பூரம், உத்தரம் 1ஆம் கால்)



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நிம்மதிக் குறைவும் மனத்தாங்கலும் அதிகரிக்கும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் தோன்றும். தேகசுகக் குறைவால் வைத்தியச் செலவு அதிகமாகும். வரவுக்கு மிஞ்சிய செலவு காட்டும். முயற்சிகள் அலைச்சல் பிரயாசையைத் தரும். விவாக கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். சக உதவிகள் குறையும். அதிகாரிகள் கடுமையாக நடந்து கொள்வர். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்கு ஒப்பந்த வேலைகளில் பிணக்குகள் தோன்றும். பிரயாசைக்கேற்ப வருமானம் கிடையாது. மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும்.

## கன்னி

(உத்தரம் 2,3,4 கால்கள்,அத்தம், சித்திரை 1,2 கால்கள்)



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப நிலை நன்றாக இருந்தாலும் மனச்சஞ்சலம் இடையிடையே இருக்கும். பணவரவு சுமாராக இருக்கும். தொடங்குங் கருமங்கள் தாமதமாகவே நிறைவேறும். தேகசுகத்தைப் பேணிக் கொள்வது நன்று. புத்திரர்களிடம் அதிக உதவியை எதிர்பார்க்க முடியாது. விவாக கருமங்கள் தாமதத்தைக் காட்டும். உத்தியோகர்களுக்கு வேலைப் பொறுப்புகள் அதிகமாயினும், சக ஊழியரின் உதவியுடன் சமாளிக்க முடியும். அதிகாரிகளின் போக்குக்கேற்ப நடந்து கொள்வது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். வாடிக்கையாளர்களை மதித்து நடந்தால் வியாபாரம் சிறக்கும். தொழிலாளர்களுக்கு தொழிலில் பிரயாசை அதிகரிக்கும். பிரயாசைக்கேற்ப லாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், தன்னம்பிக்கையும் தேவை.

## துலாம்

(சித்திரை 3,4 ஆம் கால்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் கால்கள்)



துலாராசியில் பிறந்தவர்களுக்குக் குடும்பத்தில் அமைதி பேணப்படும். புத்திரர்களால் உதவி உண்டு. உறவினர்களாலும், நண்பர்களாலும் நன்மதிப்புக் கிட்டும். கருமங்கள் வெற்றியளிக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் வரும். தேகசுகம் நன்றாக இருக்கும். விவாக கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அரச உதவிகள் கிடைக்கும். சேவைக்கு நல்ல மதிப்புண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக அமையும். ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடுதல் லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்கு ஒப்பந்த வேலைகளில் நல்ல வருமானம் கிடைக்கும். தொழிலாளர்களின் ஒற்றுமை சிறப்படையும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமுண்டு. பரீட்சைகளில் சித்தி உண்டு.

## விருச்சிகம்

(விசாகம் 4 ஆம் கால், அனுஷம், கேட்டை)



விருச்சிகராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நல்லறமாக விளங்கும். கணவன் - மனைவி அந்நியோன்யம் வலுக்கும். புத்திரர்களால் உதவி உண்டு. வெளிநாட்டிலிருந்து பண வருவாய் வந்துசேரும். தொடங்குங் கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் கைகூடும். மங்கள கருமங்கள் மனம் போல் நிறைவு பெறும். உத்தியோகத்தர்களுக்கு கௌரவம் மதிப்பு உயரும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் பிரமாதமாக நடக்கும். எதிர்பார்த்ததைவிட கூடிய லாபம் கிடைக்கும். புதிய முதலீடுகளுக்கு நன்று தொழிலாளர்களுக்கு தொழில் முன்னேற்றமடையும். நிறைந்த லாபம் கிடைக்கும். மாணவர்கள் முன்னேற்றம் பெறுவர். உயர்கல்வி வாய்ப்புண்டு.

## தனுசு

(மூலம் , பூராடம், உத்தராடம் 1 ஆம் கால்)



தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் இன்னல்கள் அடிக்கடி ஏற்படும். புத்திரர்களால் தொல்லைகள் அதிகரிக்கும். எந்தக் கருமமும் எளிதில் கைகூடாது. பிரயாசைதான் ஏற்படும். தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படும். தேவையற்ற செலவுகள் தவிர்க்க முடியாமலிருக்கும். மங்கள கருமங்கள் காலவரையறை யின்றித் தள்ளப்படும். உத்தியோகத்தர்களிடம் அதிகாரிகள் கடுமையாக நடந்து கொள்வர். வேலைப் பொறுப்புகள் அதிகமாவதால் நிம்மதி குறையும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வரவு குறையும். முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். நிதிப் பற்றாக் குறையும் ஏற்படும். தொழிலாளர்களுக்கு இடையிடையே இடையூறுகள் ஏற்படும். தொழில் வருமானமும் குறையும். மாணவர்களுக்குக் கல்வியைத் தொடர முடியாமல் கஷ்டங்கள் தோன்றும்.

## மகரம்

(உத்தராடம் 2,3,4 கால்கள், திருவோணம், அவிட்டம் 1,2 கால்கள்)



மகரராசியில் பிறந்தவர்களுக்குக் குடும்ப வாழ்வில் குதூகலம் அதிகரிக்கும். பணவருவாய் சிறப்பாக இருக்கும். கருமங்கள் தடையின்றி நிறை வேறும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் கைகூடும். வெளிநாடுகளிலிருந்து பணவருவாய் வந்து சேரும். மங்கள கருமங்கள் மனம் போல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு கௌரவம் மேலோங்கும். சிலருக்கு நிலுவைகள் வந்து சேரும். உயர்ச்சியும் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். முதலீடுகளில் நல்ல லாபம் கிடைக்கும். வங்கி நிலை திருப்தி தரும். தொழிலாளர்களுக்கு புதிய தொழில் ஒப்பந்தங்கள் கிடைக்கும். நிறைந்தலாபமும், முன்னேற்றமும் ஏற்படும். மாணவர்கள் உயர் கல்வி பெற வாய்ப்புண்டு சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் கிட்டும்.

## கும்பம்

(அவிட்டம் 3,4 ஆம் கால்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் கால்கள்)



கும்பராசியில் பிறந்தவர்களுக்குக் குடும்பத்தில் சிறுபூசல்கள் தென்படும். பண வரவுக்கேற்ப செலவும் ஏற்படும். கருமங்கள் அலைச்சலின் மேல் கைகூடும். அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரக்கூடாது. பொறுமையைக் கடைப்பிடித்தல் நன்மை தரும். மங்கள கருமங்கள் தாமதமடையும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாயினும், சகாக்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வருமானம் சுமாராக இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மத்திமமாக நடக்கும். எதிலும் எச்சரிக்கை தேவை. மின்சார் உபகரணங்கள் விற்பனை செய்வோர் நல்ல லாபமடைவர். தொழிலாளர்கள் அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாது. முயற்சிக்கேற்ப லாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு கூடிய முயற்சியும் ஊக்கமும் தேவை.

## மீனம்

(பூரட்டாதி 4 ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி)



மீனராசியில் பிறந்த்வர்களுக்குக் குடும்ப சுகம் சீராக இருக்கும். புத்திரர்களாலும், உறவினர்களாலும் உதவி கிட்டும். எடுக்கும் முயற்சிகள் கஷ்டமின்றி நிறைவு பெறும். தேகசுகம் நன்றாக அமையும். பண வருவாய் நன்றாக இருக்கும். பெண்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும். விவாகருமங்கள் விரைவில் நல்ல முடிவைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு வருவாய் சிறக்கும். அலுவலகங்களில் ஒத்துழைப்பு, மரியாதை கிடைக்கும் சிலருக்கு சம்பள நிலுவைகள் வந்து சேரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் முன்னேற்றமடையும். புதிய முதலீடுகளைச் செய்யலாம். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் சிறப்படையும். நல்ல லாபத்தை எதிர்பார்க்கலாம். மாணவர்கள் முன்னேற்றமடைவர். சிலருக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கும்.

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை 01.08.2006 திகதிய விடைகள்

### பகுதி I

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (01) 2 | (02) 3 | (03) வாசம் | (04) 1 | (05) 2 | (06) 1 | (07) 2 |
| (08) 2 | (09) 85.00 | (10) பல | (11) 2 | (12) 3 | (13) 2 | (14) 1 |
| (15) 2 | (16) B | (17) A | (18) E | (19) C | (20) D | (21)2 |
| (22) 1 | (23) 3 | (24) 2 | (25) 2 | (26) 2 | (27) 3 | (28) 4 |
| (29) 2 | (30) 4 | | | | | |

### பகுதி II

(01) 1. துப்பரவு / புனிதம் (02) மனைவி / இல்லாள் (03) ரூபா.22.00 (04) 011-2516415

(05) எஸ்.வி.எம்.உசன்ஸ் , இல 16, டாம் வீதி, கொழும்பு - 13 (06) .,!,?

(07) கருமை (08) வெண்மை + ஆக்குவது (09) நிகழ்காலம்

(10) சன்லைட் சவர்க்காரம்

(2) 1) 385 2) ரூபா 1400.00 3) ரூபா 1200.00 4) திங்கள்,120
5) செவ்வாய் , 120

(3) 1) பிழை 2) சரி 3) பிழை 4) சரி 5) பிழை
6) சரி 7) சரி 8) சரி 9) சரி 10) சரி

(4) 1) எட்டு 2) வகுப்பாசிரியர் 3) நேரசூசிகை / கால அட்டவணை
4) தண்ணீர் / நீர்

(5) 1) உப அதிபர் 2) வாழைப்பழம் 3) ஆடு 4) கிளி

(6) 1) அழகனார் 2) காடும் வயலும் 3) மரங்கள் 4) குப்பை கூழங்களால்
5) இல்லை + என்று

(7) 1) 5321 2) 30 3) 10 4) ரூபா 400 5) 606
6) 120Kg 7) ரூபா 75 8) 5619 9) 4 10) நீலம்

(8) 1) வெட்டுக்கிளி 2) பறக்கும் பூச்சி 3) வண்ணாத்துப் பூச்சி
4) பெரும் எறும்பு

(9) 1) குறிப்பிற்குச் செல் (ON YOUR MARK ) 2) ஆயத்தமாகு (GET SET)
3) செல்/ ஓடு (GO)

(10) 1) தகரவிழா 2) சூரியன், சந்திரன், நெருப்பு (தீ) 3) முட்செடி
4) பிச்சை எடுத்தாலும் சிறப்பாக வாழ் 5) பன்னிரண்டு / 12 6) நித்திரை செய்தல்
7) நீ 8) மறுபக்கம் பார்க்க 9) 1/10 10) XV
11) திருகோணமலை

(11) 1) கட்டுரை. பெருமழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்தோடியது/ பலத்த காற்றினால் மரங்கள் முறிந்து வீழ்ந்தன/ மின்சாரம் தடைப்பட்டதால் வீதி , வீடெல்லாம் இருளில் மூழ்கியது / நாங்கள் மெழுகு திரியைக் கொளுத்தி வீட்டுக்கு ஒளியைக் கொடுத்தோம் / அயலில் இருந்து மக்களின் அலறல் சத்தம் கேட்டது/ வெள்ளம் வீட்டினுள் புகுந்ததால் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினர் / அகதிகளாக வெளியேறிய மக்கள் உயரமான இடத்திலுள்ள பாடசாலையைத் தஞ்சமாக அடைந்தனர்.

# தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சைகள் இந்த மாத நடுப்பகுதியில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம் —

2005 ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற வேண்டிய தொழில்நுட்பக் கல்லூரிக்கான இறுதிப்பரீட்சைகள் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக நடைபெறவில்லை.

கடந்தமாதம் தொழில்நுட்ப கல்வித்திணைக்கள பணிப்பாளர், பரீட்சை பகுதி பணிப்பாளர் மற்றும் அமைச்சின் உயரதிகாரிகளுடனும்- கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் எஸ்.யோகராஜா நடத்திய பேச்சுகளுக்கு இணங்க அனுமதி பெறப்பட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் திட்டமிட்டபடி பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சை விடைத்தாள்கள் அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க கொழும்பில் அல்லாது இந்த முறை மட்டும் அம்பாறை கார்டி தொழில்நுட்பக்கல்லூரியில் தமிழ் பகுதி விரிவு ரையாளர்களால் திருத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் வழமையாக வினாத்தாள்கள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டு நாளாந்தம் தொழில்நுட்பக்கல்லூரிக்கு வழங்கப்படுவது வழக்கம். இந்தமுறை தரைவழியாக வினாத்தாள்கள் எடுத்து வரப்படவுள்ளன.

எதிர்வரும் 7 ஆம்திகதி கொழும்பில் இருந்து வினாத்தாள்கள் எடுத்துவருவதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், திட்டமிட்டபடி 14 ஆம் திகதி பரீட்சைகள் மாணவரின் நன்மை கருதி நடத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விடைத்தாள் திருத்துவதற்கு 15 பேர் கொண்ட விரிவுரையாளர் தொகுதியினரை 25 ஆம் திகதி அம்பாறைக்கு அழைத்து செல்ல அதிபர் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இந்த ஆண்டு தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சைகள் நவம்பர் மாத இறுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் வழமை போல் கொழும்புத் தலைமை அலுவலக திருத்தும் பணிகள் வழமைபோல் கொழும்புத் தலைமை அலுவலக பரீட்சைப் பகுதியில் நடைபெறவுள்ளது.



நல்லூர் கந்தன் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற ஐந்தாம் திருவிழாவில் முருகப்பெருமான் வெளிவீதி வலம்வரும் காட்சி

## சின்னஞ்சிறு செய்திகள்

### பயிற்சிப் பரீட்சை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான க.பொ.த (சா/த) பயிற்சிப் பரீட்சை இன்று தொடக்கம் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பரீட்சையை நடத்தி விடைத்தாள்களை புள்ளித்திட்டத்துக்கு அமைவாக மதிப்பீடு செய்து புள்ளிப்பகுப்பாய்வுப் படிவத்தைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு குறிப்பிட்ட பாடசாலை அதிபர்களை கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் தி. பெரியதம்பி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### சிறுவனை காணவில்லை

யாழ்ப்பாணம் —

உடுப்பிட்டியில் சிறுவன் ஒருவன் காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடுப்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் சதீஸ்குமார் (வயது 15) என்பவரே கட்டட வேலைக்குச் சென்றபோது காணாமல் போயுள்ளார்.

இதுவரை அவர் வீடு திரும்பாததால் அவருடைய தாயாரால் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம் —

ஊர்காவற்துறை அரிமா கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் மருத்துவ முகாம் நாளை காலை 8.30 மணிக்கு புளியங்கூடல் நெசவு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவமுகாமில் பொது மருத்துவம், கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கல், கண் சத்திரசிகிச்சைக்கான ஆலோசனை, சலரோகத்துக்கான சிறுநீர் பரிசோதனை, சலரோகத்துக்கான இரத்தப் பரிசோதனை என்பன நடைபெறும்.

நீரிழிவு நோய் பரிசோதனை நிலையம் ஒன்றும் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது. இதில் ஒவ்வொரு கிழமையும் ஒருநாள் இலவச பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

### நவகலச ஆராதனை

யாழ்ப்பாணம் —

யாழ்.வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இன்று காலை 6.30 மணிக்கு அம்பாளுக்கு நவகலச ஆராதனையும் அர்ச்சனையும் நடைபெற்று 10.30 மணிக்கு விசேட தீபாராதனை நடைபெறும்.

தொடர்ந்து அடியார்களுக்கு நோன்பு நூல் வழங்கப்படும் எனவும், எனவே இந்த நிகழ்வில் அடியார்களைக் கலந்துகொள்ளுமாறும் ஆதீன மகாசபை கேட்டுள்ளது. (100)

# அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக திருமலையில் இன்று ஹர்த்தால்!

திருகோணமலை —

திருகோணமலையில் தமிழ் மக்கள் மீது நடத்திவரும் தாக்குதல்கள், பொருளாதாரத் தடைகளை நீக்கி பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுமாறு வற்புறுத்தி - இன்று வர்த்தக நிலையங்கள், அரச திணைக்களங்களை மூடி பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுமாறு திருகோணமலை பொங்கியெழும் மக்கள்படையணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சாவுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவற்றைக் கண்டித்தும், வடக்கு - கிழக்கு மீது திணிக்கப்பட்ட பொருளாதார தடையை நீக்கி தம்முடைய மண்ணில் சுதந்திரமாக தொழில் செய்வதற்கு மீன்பிடித்தடை, விவசாயத் தடை என்பவற்றை நீக்கி சுய கௌரவத்துடன் வாழ அவர்களுக்கு இடம்கொடுக்க வேண்டும்.

மாவிலாறு நீர்த்தேக்கத்துக்கு அங்கு வாழும் மக்கள் பிரதிநிதிகளை- அரசாங்கத்தின் பிரதிநிதிகள் சந்தித்து தீர்வுகாணவேண்டும். இந்த விடயத்தில் எக்காரணம் கொண்டும் இராணுவம் தலையிடக்கூடாது. அப்படி தலையிட்டால் நான்காம் கட்ட ஈழப்போரைத் தான் காணவேண்டி வரும்.

வடக்கு - கிழக்கில் தற்போது போர்நிறுத்தம் அமுலில் உள்ள போதும் - ஏன் விமானத்தாக்குதல் நடத்தி எமது தமிழ் பிரதேசத்தில் வாழும் மக்கள் மீதும், வீடுகள், பாடசாலைகள் என்பன முற்றாக அழிக்கப்படுகிறது. இ வ ஏன்? அரசாங்கத்துக்கு யுத்தமா, சமாதானமா வேண்டும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

இராணுவம், கடற்படை, விமானப் படை, பொலிஸ் என்பவற்றின் மூலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள எமது இடங்களில் எமது மக்கள் திரும்பவும் குடியமர்த்த அந்த இடங்கள் கையளிக்கப் படவேண்டும்.

போர்நிறுத்தத்தை சரியான முறையில் அமுல்படுத்தவேண்டும். ஜெனிவாவில் கடந்த பெப்ரவரி மாதம் 22, 23 ஆம் திகதிகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்படி - ஒட்டுக் குழுக்களை அகற்றி இறுதித்தீர்வு காண பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முன் வைத்து கதவடைப்பு நடைபெறும். இந்தக் கதவடைப்பு நடைபெறும் நாளன்று அரச திணைக்கள உயர் அதிகாரிகள், ஊழியர்கள், பாடசாலைகள் மற்றும் பிறிமா ஆலை, சீமெந்து ஆலை, துறைமுக அதிகாரசபை அதிகாரிகள் ஏனைய தனியார் வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டு எமது இந்த இறுதிக்கட்ட போராட்டத்துக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று தமிழ் தேசியத்தின் பேரால் கேட்டுக்கொள்கிறோம்.

எமது வேண்டுகோளை நிராகரித்து செல்வார்களாயின் - அவர்கள் தமிழ் தேசியத்துக்கு எதிரானவர்கள் என்ற பார்வையில் பொங்கியெழும் மக்கள் படையினரால் தண்டனை வழங்கப்படும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

அத்துடன், அன்றைய தினம் சகல வாகனங்கள், ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பவற்றை வீதிகளில் செல்வதை தவிர்த்து அகிம்சை வழியில் எந்த வித வன்முறைகளுக்கும் இடம்கொடாமல் இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அலுவலக உத்தியோகத்தர்களுக்கு - ஆளுநரால் விடுக்கப்படும் பணிநீக்கம் எனும் மிரட்டலை கருத்தில் எடுக்காது இந்தப் போராட்டத்துக்கு முழு ஆதரவு தருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

அத்துடன், அத்தியாவசிய தேவைகளின் நிமித்தம் வைத்தியசாலை நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்கு வாகனங்களைப் பயன்படுத்தலாம் எனவும் தேன் தமிழ் மன்ற பொங்கியெழும் மக்கள் படையணி வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தால் படகுகள்

யாழ்ப்பாணம் —

போரினால் பாதிக்கப்பட்ட கைதடி, நாவற்குழி தெற்கு, கோவிலாக்கண்டி மக்களுக்கு அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் நேற்று படகுகளை அன்பளிப்பு செய்தது.

கடந்தவாரம் 122 குடும்பங்களுக்கு இந்த நிறுவனத்தால் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் வழங்கப்பட்டிருந்தன.

தமக்குப் படகுகளை வழங்கி உதவுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஏற்பவே இந்தப் படகுகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றதாக புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.



இந்தப் படகுகள் அந்தப் பகுதி மக்களின் வறுமையையும், குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையையும் கருத்திற் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் மூன்று குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதாக புனர் வாழ்வுக் கழகப்பிரதிநிதிகள் மேலும் தெரிவித்தனர்.

இந்தப் படகுகளுக்கான பத்திரத்தை அகதிகள் புனர்வாழ்வுக்கழக தலைவரும் பேராசிரியருமான வி.பி. சிவநாதன், கடற்றொழில் பரிசோதகர் பி.அமுதினி ஆகியோர் வழங்கினர்.

இதேவேளை, போரினால் பாதிக்கப்பட்ட கொழும்புத்துறையைச் சேர்ந்த 20 குடும்பங்களுக்கு புனர்வாழ்வுக் கழகத்தால் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான வலை வழங்கும் வைபவம் நேற்று மாலை இடம்பெற்றது.

மனோகரா யாழ்ப்பாணம்
நான்காவது வெற்றி வாரம்
ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த திருட்டு பயலே
06.08.2006 முதல்
டிஷ்யூம் புகழ் ஜீவா, கோபிகா, மோகன்லால் நடித்த அரண் (புதிய வெளியீடு)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
காட்சி நேரம் 10.30,2.30,6.30.

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ஜெயம் ரவி, திரிஷா, தேஜாஸ்ரீ, ரிச்சாட் பட்டேல்

சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்
காட்சி நேரம் : 10.30, 2.30 மட்டும்
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

## சின்னஞ்சிறு செய்திகள்

### 'பொலிவு' இதழ் வெளியாகியது

யாழ்ப்பாணம் —

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான பொலிவு சஞ்சிகையின் 12 ஆவது இதழ் வெளியாகியுள்ளது.

இந்த இதழ் - வடபகுதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு தென்பகுதி ஒப்பந்தகாரர்கள் ஏன்? எனும் தலைப்பில் விவாத நோக்கிலான கட்டுரையும், யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறை பேராசிரியர் வி.நித்தியானந்தனுடனான நேர்காணலும், திரும்பிப் பார்க்காத பக்கம் எனும் தலைப்பில் சந்தைப்படுத்தலில் ஏற்பட்டுள்ள மந்த நிலையை வெளிக்கொணரும் வகையிலான கட்டுரை, சிறுகதை, கவிதை உட்பட இன்னும் பல ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.

### ஏகாதசி விரதம்

கொக்குவில் —

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை ஏகாதசி விரத பூசை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட ஆராதனைகளுடன் 108 சங்காபிஷேகம் இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து ஸ்ரீமத் நாராயணப் பெருமான் உள் வீதி வலம் வருவார்.

நண்பகல் 12 மணிக்கு அன்ன தானம் வழங்கப்படும். (206)

### திருவாசக முற்றோதல்

மானிப்பாய் —

தென்மராட்சி - சங்கத்தானை முருகமூர்த்தி ஆலயத்தில் தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் காலை 7 மணி தொடக்கம் 2 மணி வரை திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறுமென சங்கத்தின் செயலாளர் சி.குலசிங்கம் தெரிவித்தார்.

முற்றோதலைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப் படும் எனவும் அவர் தெரிவித்தார். (100)

### வரலட்சுமி விரதம்

மானிப்பாய் —

மானிப்பாய் சோதி வேம்படி காளி கோவிலில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வரலட்சுமி விரத நிகழ்வு நடைபெறவுள்ளது.

இன்று விரதநிகழ்வின் நிறைவில் அடியார்களுக்கு வரலட்சுமி காப்பு வழங்கப்படும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (100)

☆ ☆ ☆

மானிப்பாய் —

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலயத்தில் இன்று மாலை 4 மணிக்கு வரலட்சுமி விரதமும், திருவிளக்குப் பூசையும் நடைபெறவுள்ளது.

அத்துடன் வரலட்சுமி காப்புநூல் அடியார்களுக்கு வழங்கப்படவுள்ளது. (100)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அம்புலன்ஸ் மீது தாக்குதல் மூன்று பொதுமக்கள் பலி!

திருகோணமலை —

மூதூர் வைத்தியசாலையில் இருந்து காயமுற்ற நோயாளிகளை ஏற்றிச்சென்ற படையினர்மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதலில் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை 5 மணியளவில் திரு கோணமலை அல்லை - கந்தளாய் வீதியில் இடம்பெற்றது.

மூதூர் நீதிவான் நீதிமன்ற எழுது வினைஞர் ரவி மற்றும் ஆசிரியை அமுதா ஆகியோரே இந்தச் சம்பவத் தில் சம்பவ இடத்திலேயே கொல்லப் பட்டவர்கள் ஆவர்.

படுகாயமடைந்த அம்புலன்ஸ் சாரதி அர்ஜுனன் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட பின்னர் உயி ரிழந்த இவர் ஆசிரியை அமுதாவின் கணவராவார்.

மூதூர் சென்.அன்ரனீஸ் தேவால யத்தின்மீது நேற்றுமுன்தினம் படை யினர் நடத்திய எறிகணைத் தாக்கு தலில் ரவி மற்றும் அமுதா ஆகியோர் படுகாயமடைந்திருந்தனர்.

படுகாயமடைந்த இவர்கள் உட னடியாக ஈச்சிலம்பற்று மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மூதூர் மருத்துவமனைக்கு இடமாற் றப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் மேலதிக சிகிச் சைக்காக திருகோணமலை மருத் துவமனைக்குக் கொண்டுசெல்லப் பட்ட போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

அம்புலன்ஸ் தமது தாக்குதலுக்கு இடையில் அகப்பட்டுவிட்டதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

# சுன்னாகம் தாக்குதலையடுத்து இரண்டு இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம் —

சுன்னாகம் பகுதியில் வெள்ளை வானில் வந்தவர்கள் - இராணுவத் தினர் மீது தாக்குதல் நடத்திய சம்ப வம் தொடர்பாக இருவரை படையினர் கைது செய்தனர்.


துரைசிங்கம் குமார், துரைசிங் கம் விஷ்னுகுமார் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் சுன்னாகம் இராணுவ முகாம்மீது வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் நான்கு படை யினர் காயமடைந்ததாக இராணு வத்தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வெள்ளைவான் சண்டிலிப்பாய் பகு தியில் கைவிடப்பட்ட நிலையில் நின்ற போது படையினர் மீட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். கை விடப்பட்ட வெள்ளை வான் நின்ற பகுதியில் தேடுதல் நடத்திய படையி னர் மேற்படி இரு இளைஞர்களை யும் கைதுசெய்தனர்.

இதேவேளை, தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வெள்ளை வான் கடத்திக்கொண்டு வரப்பட்டதாகத் தெரியவருகிறது.



மூதூர் இறங்குதுறையில் படையினரை தரையிறக்குவதற்காக கடற்படையினர் பயன்படுத்திய துருப்புக்காவி.

# கட்டைக்காடு தேவாலயம் மீது கிபிர் குண்டுத் தாக்குதல்!

## இரு பொதுமக்கள் காயம்

தாளையடி —

வடமராட்சி கிழக்கில் கட்டைக்காடு தேவாலயத்தின் மீது விமானப்படை யின் கிபிர் போர் விமானங்கள் நடத் திய குண்டுவீச்சில் இரு பொதுமக்கள் காயமடைந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியள வில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

வன்னி வான்பரப்பில் நுழைந்த விமானப்படையின் இரு கிபிர் விமா னங்கள் முல்லைத்தீவுப் பகுதியில் தாழப்பறந்து வட்டமிட்ட பின்னர் - வடமராட்சி கிழக்கு வான்பரப்புக்குள் பிரவேசித்து கட்டைக்காடு பகுதியில் பெருநாள் நிகழ்வுக்காக தேவாலயத் தில் கூடியிருந்த மக்களை இலக்கு வைத்து குண்டுகளை வீசின.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த யாக்கோப்பு அனெற்றன் (வயது 26), யாக்கோப்பு அனிற்றா (வயது 32) ஆகியோர் காயமடைந்தனர்.

இவர்களில் அனெற்றன் மருதங் கேணி மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

# புலிகளுடன் பேச தயார் அரசாங்கம் அறிவிப்பு!

கொழும்பு —



தற்போதைய நிலைமைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு தயாராக இருப்பதாக அரச பாதுகாப்பு விவகார பேச்சாளர் கெக லிய ரம்புக்வெல தெரிவித்தார்.

மூன்று நாட்களாகத் தொடரும் மோதல் மற்றும் அரச படைகளுக்கு ஏற்பட்டு வரும் இழப்பு ஆகியவற்றின் பின்னரே அரசு இவ்வாறானதொரு முடிவை எட்டியுள்ளது.

பேச்சுக்கான கதவுகளைத் திற ந்தே வைத்துள்ளோம். விடுதலைப் புலிகள் சம்மதிக்கும் பட்சத்தில் நாங் கள் அவர்களுடன் பேசுவதற்குத் தயார். மாவிலாறு அணைக்கதவுகளைத் திறந்து விட வேண்டும் என்பதே எமது விருப்பமே தவிர போரல்ல. அணைக் கட்டைத் திறந்து விட்டால் அடுத்த பத்து நிமிடங்களில் யுத்தம் நிறுத்தப்படும்.

மூதூர் நகரம் அரசகட்டுப்பாட்டில் தான் இருக்கிறது. வெளியே நின்று பார்க் கும்போது - புலிகளின் நடமாட்டம் தெரிவதால் அவர்களது கட்டுப்பாட்டில் உள் ளதாக தோற்றமளிக்கிறது எனத் தெரிவித்தார்.

## 40 படையினரின்...

நிற்கிறார்கள். மூதூர் இறங்கு துறையை வசப்படுத்தியிருக்கிறோம். அதை முறியடிப்பதற்கு முயன்ற இராணுவத்தினரின் முயற்சியை நேற்று நண்பகல் முறியடித்தோம். அப்போது படகு ஒன்று மூழ்கடிக்கப் பட்டது.

எங்கள் தரப்பில் இதுவரை 12 போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். 40 இராணுவத்தினரின் சடலங்கள் எம்வசம் உள்ளன. அதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக ஒப்படைப்பதற்கு யோசித்து வருகி றோம்.

12 முஸ்லிம் சகோதரர்கள் படை யினரின் ஷெல் தாக்குதலில் கொல் லப்பட்டிருக்கிறார்கள். இதனை மூடி மறைத்து விடுதலைப் புலிகளின் தாக் குதலில் கொல்லப்பட்டதாக - அரசும் அது சார்ந்த ஊடகங்களும் விசமத் தனமான பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மூதூரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக் கள் மற்றும் முஸ்லிம் மக்களுக்கான உடனடி மனிதாபிமான உதவிகளை விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

மூதூரை நோக்கி படையினர் மேற் கொண்ட படைநடவடிக்கை மற்றும் எறிகணைத் தாக்குதல் மூலம் இடம் பெயர்ந்து ஆலயங்களிலும், பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கான உடனடி மனிதாபி மான உதவிகளை - திருமலை மாவ ட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், ஐ.நா அமைப்புக்களுக் கான இணைப்பாளர் பாவலன் ஆகி யோர் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

## காயமடைந்த...

அடங்குவதாகத் தெரியவருகிறது.

தாம் எந்தவொரு பாதுகாப்பும் இன்றியே மூதூர் இறங்குதுறைக்கு லொறிகள் மூலம் கொண்டுவரப் பட்டதாக முஸ்லிம் பொதுமகன் ஒரு வர் தெரிவித்தார்.

சிறிய படகுகள் மூலம் கொண்டு வரப்பட்டு நடுக்கடலில் கடற்படை பீரங்கிப்படகுகளில் ஏற்றி திருமலைக்கு கொண்டுவரப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

திருமலைக்கு கொண்டு செல்லப் பட்ட 79 பேரில் 7 பேரின் நிலை ஆபத்தாகவுள்ளமை குறிப்பிடத்தக் கது.

## புலிகளின்...

இது தொடர்பாக நோர்வே அரசு டன் இலங்கை அரசு தொடர்பு கொண் டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இன்று கொழும்பு வரும் நோர்வே விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் மூலம் அரசு இந்த முயற்சி யில் இறங்கலாம் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படையினரின்...

இந்தச் சம்பவத்தில் 10 முஸ்லிம் பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் சுமார் 50 பேர்வரை காயமடைந் தனர்.

இதன்பின்னர் தோப்பூர் அல் நுரையா முஸ்லிம் பாடசாலையில் தங்கியிருந்த மக்கள் மீது நடத்தப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலில் 12 பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் 5 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவங்களில் காயமுற்ற வர்கள் உட்பட 79 பேர் நேற்று மாலை திருகோணமலை வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்டனர்.

## தாக்குதலை நிறுத்த...

அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இன்று கொழும்பு வரும் நோர்வே விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் புலிகளைச் சந்தித்து-போர் நிறுத்த உடன்படிக்கைக்கமைய முன்னைய நிலைக்குப் பின்வாங்கு மாறு கோருவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

அத்துடன், திருகோணமலை துறைமுகத்தின் பாதுகாப்பு தொடர்பா கவும் அவர் புலிகளுடன் பேசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், இந்தமுறை புலிகள் இறுக்கமான போக்கையே கடைப் பிடிக்கக்கூடும் என கொழும்பு அரசி யல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

போர்நிறுத்த உடன்பாட்டின்படி முன்னைய நிலைகளுக்கு திரும்புவ தாயின் - அரசும் போர்நிறுத்த உடன் படிக்கையின்படி நிறைவேற்ற வேண் டிய மூன்று முக்கிய விடயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று புலிகள் வலியுறுத் துவார்கள் என எதிர்பார்க்கப்படுவ தாக அந்த வட்டாரங்கள் தெரிவித் தன.

உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், துணை ஆயுதக்குழுக் களின் ஆயுதக்களைவு, போராளிக ளின் அரசியல்பணி ஆகியவற்றை நடைமுறைப்படுத்தினாலே புலிகள் தமது படைநகர்வை இடைநிறுத்து வது குறித்து ஆலோசிக்கக்கூடும் என்றும் கொழும்பு அரசியல் வட்டா ரங்கள் தகவல் வெளியிட்டன.

## படையினரைத்...

படகுகள் என்பன மூதூர் இறங்கு துறை நோக்கி சென்றன.

மூதூர் நகருக்குள் முற்றுகைக் குள்ளாகியிருக்கும் படையினரை மீட் கும் நோக்கில் இடம்பெற்ற இந்த தரை யிறக்க முயற்சியை எதிர்த்து புலிகள் கடும் தாக்குதல் நடத்தினர்.

உதவித்துருப்புக்களை தரை யிறக்க விடாமல் கடற்புலிகளும், புலி களின் மோட்டார் அணிகளும் தாக்கு தலை மேற்கொண்டன.

இறுதியில் புலிகளின் கடும் எதிர் தாக்குதல்களால் கடற்படையினர் தமது முயற்சியைக் கைவிட்டு பின் வாங்கினர். இந்த மோதலின் போது கடற்படையினரின் படகு ஒன்றை தாம் மூழ்கடித்ததாக விடுதலை ப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்த தரையிறக்க முயற்சியின் போது கடற்படையினருக்கு உதவி யாக - உக்கிரமான ஆட்லறி, பல்குழல் பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல் கள் நடத்தப்பட்டதுடன், விமானக் குண்டு வீச்சுக்களும் நடத்தப்பட்டன.

அதேவேளை, தரையிறக்க முய ன்ற கடற்படையினர் மீது புலிகள் தாக் குதல் நடத்தியதாகவும் - இதன்போது படையினரின் ரொக்கட் தாக்குதலில் புலிகளின் படகு மூழ்கடிக்கப்பட்டதாக வும் அரச தரப்பு அறிவித்துள்ளது.

## ஷெல் வீசியது...

போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசபடையினரின் ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மூலம் அப்பாவி தமிழ் மக்கள் பலர் உயிரிழந்துள்ள னர். பெருமளவானோர் காயமடைந் துள்ளனர். இவர்களுக்கான சிகிச்சை களை வழங்குவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக மருத்துவ நிபுணர்களை அந்தப் பகு திக்கு அனுப்பி வைத்துள்ள போதும்- படையினரின் எறிகணைத் தாக்கு தல்களால் அந்தப்பகுதிக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, படையினர் ஆட்லறித் தாக்குதல்களை நிறுத்தாத நிலையில் அங்கு காயமடைந்தவர்களுக்கு சிகி ச்சை அளிக்க முடியாதுள்ளது. அத்து டன், அவர்களுக்கான அவசர மனி தாபிமான உதவிகளை செய்ய முடி யாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரசும் - விடுத லைப் புலிகளும் தற்காலிகமாக மோதல் தவிர்ப்பை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.

அத்துடன், போர்நிறுத்த உடன் படிக்கையில் குறிப்பிட்டது போல விடு தலைப் புலிகளும், அரசாங்கமும் தாங்களாகவே பின்வாங்கி - பேச்சு வார்த்தை யை உடன் ஆரம்பிப்பதே சிறந்தவழி என முஸ்லிம் காங்கிரஸ் கருதுவதாக அவர் மேலும் தெரிவித் தார்.

## கடும் சமர் தொடர்கிறது...

இடம்பெற்றன. ஆங்காங்கே சிறு சிறு குழுக்களாக சுற்றிவளைப்புக்குள்ளா கியிருக்கும் படையினர் மீது புலிகள் மேலும் தாக்குதல்களை தொடர்ந்த னர்.

இந்தமோதல்களையடுத்து மேலும் பல பகுதிகளை விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்திருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. அதேவேளை, பெருமளவு படையினர் புலிகளிடம் இருந்து தப்பு வதற்காக சிவிலுடையில் ஆயுதங் களின்றி வெளியேறுவதாகவும் கூறப் படுகிறது.

நகரப்பகுதி புலிகளின் முற்றுகைக் குள்ளாகியிருப்பதால் எஞ்சியுள்ள படையினரை மீட்க படைத்தரப்பு தொடர்ந்தும் முயற்சிகளை மேற் கொண்டு வருகிறது.

நேற்று மாலை 5.30 மணி முதல் - இந்தச் செய்தி எழுதப்படும் வரை தீவிரமான சமர் இடம்பெற்று வருகிறது.

திருகோணமலை மாவட்ட கட்ட ளைத்தளபதி கேணல் சொர்ணம் மற்றும் திருமலை மாவட்டத்தளபதி அறிவு ஆகியோரின் தலைமையின் கீழ் தாக்குதல்கள் தொடர்வதாக விடு தலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்று மூதூர் நகரில் இடம்பெற்ற மோதல்களில் இரண்டு பொலிஸா ரும், இரண்டு ஊர்காவல் படையின ரும் பலியானதாகவும் - 16 பேர் காய மடைந்ததாகவும் அரச தரப்பு தெரி வித்தது.

அதேவேளை, சேருவில பிரதேசத் தை நோக்கி விடுதலைப் புலிகள் நேற் றுக் காலை முதல் படைநகர்வு முயற்சி களை மேற்கொண்டுள்ளதாக மற் றொரு தகவல் தெரிவித்தது.

சேருவில பகுதியில் அமைந்துள்ள பல இடங்களை புலிகள் கைப்பற்றி யுள்ளதாகவும், சேருவில - சேருநுவர பகுதிகளை இணைக்கும் பாலம் புலி களின் முழுமையான கட்டுப்பாட்டுக் குள் வந்துள்ளதாகவும் - மாவிலாறு பகுதியிலிருந்து 5 கிலோமீற்றர் தொலைவிலிருக்கும் கல்லாறு படை முகாமை தனிமைப்படுத்தும் நோக்கி லேயே இந்தப் படைநகர்வு இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை மூதூர் நகரம், கட்டை பறிச்சான், பாலத்தோப்பு, பச்சனூர், மகிந்தபுர, காந்திநகர், செல்வநகர் என பல பகுதிகள் விடுதலைப் புலிக ளின் முழுமையான கட்டுப்பாட்டுக் குள் வந்துள்ளதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

நேற்று விமானத்தாக்குதல்கள் குறைந்திருந்தபோதும் - படையின ரின் பல்குழல் பீரங்கித் தாக்குதல்கள் மிகவும் உக்கிரமாக இடம்பெற்று வருவதாகவும் அங்கி ருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.08.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.